# பாதுகாவலன்

PATHUKAVALAN


**செய்திகள்**

உங்கள் செய்திகளை தயவு செய்து, பொருள்படஎழுதி அனுப்புங்கள். சாதாரண நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது மற்ற மக்கள் பயன்படத்தக்க விதமாகச் செய்திகளை எழுதுங்கள். திருச்சபை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும், செய்தியாக இருந்தால், நிச்சயம் எமது பத்திரிகையில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

தரம் கண்டு, திருத்தங்களுடன் பிரசுரிப்போம்.


Nallur Branch Library

மலர் 114 இதழ் 21 12-8-1988 (ஆகஸ்டு12 – ஆகஸ்டு 19) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

நீதி, சமாதானம், மனித முன்னேற்றத்திற்கான இலங்கைத் தேசிய கத். ஆணைக்குழுவின் அழைப்பு

# ஜனநாயக உரிமையைப் பயன்படுத்த அரசு பொதுத்தேர்தலை நடத்தவேண்டும்

**இலங்கைத் தேசிய கத்தோலிக்க ஆணைக்குழு விடுத்துள்ள அறைகூவலில் "அநீதியை நியாயப்படுத்துவதும் அங்கீகரிப்பதும் எமது விசுவாசத்துக்கு எதிர்மாறுனது. மக்கள் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்குமுகமாக ஒரு பொதுத்தேர்தலை நடத்த முன்வர வேண்டும்" எனத் தெரிவித்துள்ளனர்.**

நீதி, சமாதானம், மனித முன்னேற்றத்திற்கான இலங்கைத் தேசிய கத்தோலிக்க ஆணைக்குழு ஆனிமாத நடுப்பகுதியில் வெளியிட்ட இருபது பக்கங்கள் கொண்ட தன்தீர்மானத்தில் ''அநீதியை நியாயப் படுத்துவதும், அங்கீகரிப்பதும் எமது விசுவாசத்துக்கு எதிரானது. அநீதியை நியாயப்படுத்துவது ஆபத்தானது'' எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

''நீதி, சமாதானம், ஐக்கியம், சகவாழ்வு என்பவற்றை ஆதரிக்கும் அனைவரும் ஒன்றுபடவேண்டும். எல்லா அரசியல் கட்சிகளும் தமது தனிப்பட்ட அபிலாஷைகளைக் கைவிட்டு பொது நன்மைக்காக ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்'' என அழைப்பு விடுத்துள்ளனர்.

மக்கள் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்குமுகமாக ஒரு பொதுத் தேர்தலை நடத்த முன்வரவேண்டும் என இலங்கை அரசை அவர்கள் கோரியுள்ளனர்.

## மரியாளின் ஆண்டில் 'கருத்தரங்குகள்'

மரியாளின் ஆண்டில் 30 க்கு அதிகமான கிராமங்களில் போரின் மத்தியில் நம் அன்னை மரியாள் வேண்டி நிற்கும் மாபெரும் மனமாற்றத்தை ஊக்குவிக்குமுகமாக "தேவதாயாருடன் இறையரசைத் தொடர்தல்'' என்ற கருத்தரங்கை நடத்தினேம். இதைத் தொடர்ந்து 1988 ஆவணி - 89 ஆவணி வரை ''விசுவாசப் புதுப்பித்தலிற்கான'' கருத்தரங்கு ஒன்றை விருப்பியோருக்கு கிராமங்களிலும், பங்குகளிலும் 3 நாட்களிற்கு தொடர்ந்து நடத்த ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. பங்குக் குருக்கள் விண்ணப்பிக்கலாம்.

"உரைகள் வெள்ளி மாலை 4 மணி - 6 மணி வரை "உயிர்த்த கிறிஸ்துவே நம் வாழ்வின் அடைக்கலம், அவர் தரும் அருள் வாழ்வினைப் பெறுவது அவசியம்'' அது எப்படி என்ற கருத்துக்கள் கூறப்படும். சனி மாலை 4 மணி - 6 மணி வரை கடந்த நிகழ், எதிர்கால பயன்களிலிருந்து எம்மை வெறுமையாக்கல், ஞாயிறு காலை 9 மணி - 12 மணி வரை செபம், சிலுவை, அர்ப்பணம் என்ற உரைகளைத் தொடர்ந்து அர்ப்பணச்சடங்கோடு முடிவடையும்.

"ஏனெனில் நாம் உங்களைப் பற்றிக்கொண்டிருக்கும் எண்ணங்கள் நமக்குத் தெரியும், அவை உங்களுக்கு வளமான பிற்காலத்தையும் நம்பிக்கையையும் தரும்படி நாம் கொண்ட சமாதானத்தின் எண்ணங்களே தவிர, துன்பத்தின் எண்ணங்கள் அல்ல''

எரெமி. 29 : 11

—சுவாமி ஜெயசீலன்.

## உயிலங்குளப் பங்கில் மரியாள் ஆண்டு தினம்

கடந்த 17. 7. 88 அன்று உயிலங்குளம் பங்கில் மரியாள் ஆண்டு தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஞாயிறு காலை திருப்பலியின் பின் காலை 9. 30 மணியளவில் பங்குத்தந்தை அருள்திரு. ஸ்ரனி அன்ரனி. அ. ம. தி. அவர்கள் குத்துவிளக்கேற்றி நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்தார். பங்கிலிருந்து ஏனைய 11 துணைப்பங்குகளிலுமிருந்து ஏராளமான மக்கள் பங்குபற்றினுர்கள். "கண்காட்சியினைத்'' தொடர்ந்து மதிய இடைவேளையின் பின் பி. ப. 3. 30 மணியளவில் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது.

மங்கல குத்துவிளக்கு ஏற்றப்பட்ட பின் பங்கின் வழிபாட்டுக்குழுத் தலைவர். திரு. ம. சவிரி அவர்கள் "மரியன்னையின் மகிமை'' என்ற தலைப்பில் உரையாற்றினுர். அதனையடுத்து பங்குத்தந்தையின் உரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது. ''மரியாளின் மகிமை'' ''மரியாளின் அற்புதக் காட்சி'' மரியாளின் புதுமை போன்ற தலைப்புகளிலும் வில்லுப்பாட்டின் மூலமும் மரியன்னையின் மகிமை வெளிப்படுத்தப்பட்டது.

கலை நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின் பங்கில் பாடசாலை ரீதியாக நடத்தப்பட்ட ''மரியாள் ஆண்டு'' சிறப்புக் கட்டுரைப்போட்டியில் பங்கு பற்றித் தெரிவானவர்களுக்கும் கலை நிகழ்ச்சியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களுக்கும் பங்குத்தந்தையினுல் பரிசில்கள் வழங்கப்பட்டது. கலை நிகழ்ச்சிக்கான முதலாம் இடத்தைக் கள்ளிகட்டைக்காடு "திருச் சிலுவை'' ஆலய சபையினர் ''வில்லுப்பாட்டு'' மூலம் மரியன்னையின் மகிமையை வெளிப்படுத்திப்பரிசிலைப் பெற்றுச் சென்றுர்கள்.

கலைநிகழ்ச்சிக[illegible]வும்முடிவடைந்த பின் வழிபாட்டுக்குழுச் செயலாளர் திரு. J. செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் நன்றியுரையுடன் ''மரியாள் ஆண்டு தினம்'' மாலை. 6. 00 மணியளவில் இனிதே முடிவுற்றது. நிகழ்ச்சியினைக் கண்டு களிக்க ஏராளமான பிறசமயத்தவர்களும் கலந்துகொண்டது கூறிப்பிடத்தக்கது.

தகவல்:- ச. பிரபா

## விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்

ஆடிமாதம் 17ந் திகதி மன்னுர் மறைவட்ட ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பெரியபண்டிவிரிச்சானிலும் சின்னப்பண்டிவிரிச்சானிலும் உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தை அறுபது பேருக்கு வழங்கினுர்கள். ஆயர் தமது மறையுரையில் ''பரிசுத்த ஆவியினுடைய கொடைகளை நிறைவாகப் பெறுகின்ற நீங்கள் முதிர்ச்சியும், பொறுப்புணர்ச்சியுமுள்ள கிறிஸ்தவர்களாகத் திகழ வேண்டும். கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படுகின்ற சவால்களை, துன்பங்களைத் துணிச்சலுடனும், பொறுமையுடனும் எதிர்த்துப் போராடி விசுவாசத்தில் உறுதியாயிருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் எம்முள் இருந்து செயலாற்ற, வழி நடத்த நாம் இடம்விட்டுக் கொடுக்கவேண்டு மென்றும்'' கூறினுர்.

தகவல் :– அ. நிமலன்

## பாடசாலையில் மரியாளின் ஆண்டு

கிறிஸ்துவின் தாயாகவும் நம் சமாதான இராக்கினியாகவும் விளங்கும் மரியம்மாளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆண்டை முன்னிட்டு வங்காலை சென். ஆன்ஸ். மகா வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து ஆடி மாதம் 8-ம் திகதி அன்று காலை 9 மணியளவில் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இருந்து செபமாலைப்பவனியாகப் பாக்கள் இசைத்து, மரியாளை அதிபர்கையில் ஏந்திவர, பாடசாலையை வந்தடைந்தனர். பாடசாலை வாசலில் இருந்து தீபம், தூபம், மலர், மூன்று பொருட்கள் மூலம் வரவேற்றுப்பாடசாலையில் வகுப்பு ரீதியாக மாணவ மாணவிகள் செபத்தில் ஈடுபட்டு தங்களையெல்லாம் மரியாளுக்கு அர்ப்பணித்தனர்.

றெ. எல்மோ. றெவ்வல்

## தங்கயூபிலி காணும் அடிகளார்



அருள்திரு

Z. நீக்கிலஸ் குரூஸ்

அ. ம. தி.

குருத்துவ அர்ப்பணம்:

13—08 - 1938

தங்கயூபிலி காணுதல்:

13—08—1988

தங்கயூபிலி காணும் பெரும் பேருளரான அடிகள் நற்சுகமும் இறையருளும் நிறையப்பெற்றுத் திருப்பணியாற்றி நீடு வாழ பரமனருளை வேண்டுகின்றேம்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம்கருத்து

# வாழ்க ! மரியே !!

இவ்வாண்டு ஆவணித் திங்கள் 15ஆம் நாள் கொண்டாடப்படும் மரியாளின் 'விண்ணேற்பு விழா' வானது நம் திருத்தந்தை பிரகடனப்படுத்திய மரியாளின் ஆண்டின் சிகரம் என அழைக்கத்தக்க பெருவிழாவாகும்.

சென்ற ஆண்டு பரிசுத்த ஆவியின் பெருவிழாவுடன் ஆரம்பித்த இந்த மரியாளின் ஆண்டைச் சிறப்பிக்க எமது திருத்தந்தையும், ஆயர்கள், குருக்களும் விடுத்த அழைப்பை ஏற்றுப் பெரும்பாலான கத்தோலிக்கர்கள் பல்வேறு பக்தி முயற்சிகளில் ஈடுபட்டமை, மக்கள் மரியாள்மேல் கொண்ட பாசத்தையும் வணக்கத்தையும் வெளிக்காட்டுவதாக அமைந்தன.

எதையும் தட்டிக் கேட்கும் காலம் இது. எதை நோக்கினும், ஏன், எப்படி, எதற்கு என்னும் கேள்கள் நம்மில் அரும்புதல் இயல்பு.

மரியாளின் ஆண்டை மகிழ்வுடன் கொண்டாடும் அதே வேளையில் பலர் திறந்த உள்ளத்தோடு பல கேள்விக் கணைகளைத் தொடுத்து திருச்சபையின் வாழ்விலும் வழிபாட்டிலும் மரியாளுக்குக் கொடுக்கப்படும் இடத்தை அறிய விரும்பியதை உணர்ந்து, அவற்றிற்கு விடைபகர முற்படாவிட்டாலும் விளக்கம் கொடுக்க முடியும் என்ற எண்ணத்துடன், 'பாதுகாவலன்' கடந்த காலங்களில் பல ஆக்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டது.

திருத்தந்தை மரியாளின் ஆண்டைச் சிறப்பிக்க வெளியிட்ட ''மீட்பரின் அன்னை'' என்னும் திருமுகத்தை இன்றுவரை பகுதி பகுதியாகப் பிரசுரித்து வாசகர்கள் போதிய விளக்கம்பெற வழிவகுத்தோம்.

மரியாளின் ஆண்டின் சிகரமாக அமையும் மரியாளின் விண்ணேற்ற விழா 1950ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் திகதி திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் பிரகடனப்படுத்தப்பட்ட விசுவாச உண்மையை அறிக்கையிடும் விழாவாகும்.

இவ்விசுவாச உண்மை மக்கள் மத்தியில் பலகாலமாக வழிபாட்டிலும் பக்தியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்து, கடந்த 38 ஆண்டுகளாக திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டுப் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

''இறைவனின் தாய் இயேசு கிறிஸ்துவோடு உன்னதவிதமாய் ஐக்கியப்பட்டுள்ளாள். கருவில் அமல உற்பவமாய், தாய்மையில் கன்னியாய், மீட்பின் உற்ற உதவியாய் இருந்த அன்னை பாவத்தினின்றும் அதன் விளைவுகளிலிருந்தும் முற்றிலும் வெற்றி பெற்ருள். அவளுக்குக் கிடைத்த வரங்கள் எல்லாம் நிறைவாகும் வகையில், கல்லறையின் அழிவினின்று பாதுகாக்கப்பட்டு அவள் தேவ மகனைப்போல் சாவை வென்று ஆன்மாவோடும் உடலோடும் விண்ணக மகிமைக்கு உயர்த்தப்பட்டாள்'' என்பதே திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப்பட்ட மரியாளின் விண்ணேற்பு பற்றிய விசுவாச சத்திய விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

மரியாளின் மகத்துவத்தை கடந்த 15 மாதங்களாக நினைவுகூர்ந்த திருச்சபை தன் விசுவாசிகள் அனைவரையும் அந்த அன்னை மூலம் ஒன்றிணைத்து ஒரே விசுவாச ஒளிபெற்று வாழ அழைக்கின்றது.

இந்தச் சிறப்பாண்டில் நாம் இறையருளை நிறைவாகப்பெற்று, இறைவனில் நிலைத்துவாழ மரியன்னையின் பரிந்துரையை நாடுவோம்.

**எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வந் தகைத்து.**

## 'எம் கருத்து' குறள் தெளிவுரை

பணிவுடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும்; அவர்களுள் சிறப்பாகச் செல்வர்க்கே மற்ருெரு செல்வம் போன்றதாகும்.

# மரியாளின் விண்ணேற்பு

முன்னுரை:

பரிசுத்த கன்னிமரியாள் சம்பந்தமாக, கத்தோலிக்க திருச்சபை பிரகடனப்படுத்தியிருக்கும் இரண்டாவது விசுவாச சத்தியம் அவளதுவிண்ணேற்பு பற்றியதாகும். மரியாள் தனது இவ்வுலக வாழ்வின் முடிவில் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள் எனத் திருச்சபை ஆசிரியம் எடுத்துரைக்கிறது. இது அன்னையின் ஆரோபணம் என்றும் அழைக்கப்படுகிறது. பரிசுத்த கன்னிமரியாள்பற்றிய இவ்விசுவாச உண்மையைத்தான் திருச்சபை ஆண்டுதோறும் ஆவணி மாதம் 15-ம் திகதி அன்னையின் விண்ணேற்பு விழாவாகக் கொண்டாடிமகிழ்கின்றது அன்னையின் இவ்வுலக வாழ்வின் இறுதியில் இடம் பெறும் அவளது விண்ணேற்பானது, அன்னையானவள் இறைவனது விண்ணக மகிமையில் முழுமையாகப் பங்கு கொள்வதைச் சுட்டிக்காட்டுகிறது. இறைவனின் அன்னையாகக் கருவிலிருந்தே பாவமற்றவளாக வாழ அழைக்கப்பட்ட அன்னை மரியாள் தனது வாழ்வு முழுவதும் பாவமற்றவளாகவே வாழ்ந்தாள். அன்னையினது தூய்மையான விசுவாச வாழ்விற்கு இறைவன் தந்த பரிசு, அவளை உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டதாகும். இவ்வாருக, இறைவனது விண்ணக மகிமையில் நிறைவான விதத்தில் பங்குகொள்ளும் அன்னையானவள் நமது தேவைகளுக்காக இறைவனிடம் பரிந்துபேசுகிருள் அத்துடன், இறுதிக் காலத்தில் நடுவராக வரும் கிறிஸ்துவின் வருகையின்போது, அவரில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் பெறவிருக்கும் விண்ணக மகிமைக்கு அன்னையின் விண்ணேற்பு சிறந்த முன்னடையாளமாகவும் திகழ்கிறது.

மரியாளின் விண்ணேற்பு
எனும் மறைபொருள்:

மரியாளின் விண்ணேற்பு பற்றி விவிலியத்தில் நேரடியான குறிப்பேதும் இல்லை. திருச்சபை மரபில் தான் அன்னையின் விண்ணேற்பு பற்றி எடுத்துரைக்கப்படுகிறது. திருச்சபையின் முதல் நூற்ருண்டுகள் மரியாளின் விண்ணேற்பு பற்றியோ அல்லது அவளது மரணம் பற்றியோ எதுவும் பேசவில்லை, மாருக இறைவெளிப்பாட்டின் முக்கிய உண்மைகளுக்கே முதலிடம் தரப்பட்டது. அத்துடன் கிறிஸ்துவிற்காக இரத்தம் சிந்திய வேதசாட்சிகள் பக்கமும்தான் திருச்சபையின் கவனம் திரும்பியிருந்தது. கி. பி. 431இல் எபேசு திருச்சங்கம் மரியாள் 'இறைவனின் தாய்' என அறிவித்ததைத் தொடர்ந்துதான், மரியாள் பற்றியும், கிறிஸ்துவின் மீட்புப் பணியில் அவளது தனிப்பட்ட பங்கு பற்றியும் திருச்சபை சிந்திக்கத் தொடங்கியது, இதன் காரணமாக மரியாள் பற்றிய திருச்சபையின் விசுவாச சிந்தனையில் ஒருவித வளர்ச்சி படிப்படியாக ஏற்படுகிறது. இறைவனின் அன்னையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவள் தன் கருவிலேயே பாவமற்றவளாகப் பிறந்திருக்க வேண்டும் என்ற சிந்தனையின் விளைவுதான் அவளது அமல உற்பவம் எனும் திருச்சபையின் விசுவாச சத்தியம். மாசற்றவளாய்ப் பிறந்த கன்னிமரியாள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் இறைவனின் திருமகனுக்குத் தாயானுள். இறைவனுக்கே தன்னை முற்றிலும் கையளித்துக் கன்னியாகவே வாழ்ந்தாள். பாவத்தை விலக்கி மாசற்ற வாழ்வு நடாத்திய அன்னையானவள் இறைவனது மகிமையிலும் நிறைவாகப்பங்குபெறவேண்டு என்ற திருச்சபையின் விசுவாச சிந்தனையின் நிறைவுதான் அன்னையின் விண்ணேற்பு பற்றிய அறிவிப்பாகும். இதனை ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள்'' என்னும் அவளது விண்ணேற்பு பற்றிய விசுவாச சத்தியத்தைப் பிரகடனப்படுத்தினர்.

முடிவுரை:

திருச்சபை எடுத்துரைக்கும் கோட்பாடுகள் நம் விசுவாசத்தை வெளிப்படுத்தும் அடையாளச்சின்னங்களாகும். பரிசுத்த கன்னிமரியாள் தனது ஆன்மாகவாடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள் எனும் போது, அவள் கிறிஸ்துவின் அருளால் மீட்கப்பட்டு முழு நிறைவு எய்திவிட்டதனையே சுட்டிக்காட்டுகிறது. மரியாளின் மனித வாழ்வினது நிறைவையே அவளது விண்ணேற்பு வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின்போது நாம் அடையவிருக்கும் மகிமையின் நிறைவை மரியாள் ஏற்கனவே

## மரியாளின் ஆண்டு சிறப்புக் கட்டுரை (5)

நாம் வரலாற்று ரீதியாக நிரூபிப்பது கடினமானது. ஏனெனில் இந்த விசுவாச சத்தியம் வரலாற்று மரபைச் சார்ந்தது அல்ல, மாருகத் திருச்சபையின் கோட்பாட்டு மரபைச் சார்ந்ததாகும்.

மரியாளினது வாழ்வின் முடிவுபற்றிப் பாரம்பரியத்தில் பல கதைகள் உண்டு. உதாரணமாக, மரியாள் தான் எப்போது சாவேன் என்று அவளுக்குத் தெரியும் என்றும், ஆயினும் அவள் சாகவில்லை மாருகத் தூங்கிவிட்டாள் என்றும், அவள் அடக்கம் பண்ணப்பட்ட மூன்ரும் நாள் ஆண்டவர் வானதூதருடன் வந்து அவளை விண்ணகத்திற்கு அழைத்துச் சென்ருர் என்றும் கூறப்பட்டுள்ளது. கி. பி. 4-ம் நூற்ருண்டில் இதனை அடிப்படையாக வைத்து திருநாள் கொண்டாடப்பட்டது. 6-ம் நூற்ருண்டில் கீழைத் திருச்சபையினர் அன்னையானவள் இவ்வுலக வாழ்விலிருந்து விண்ணக மகிமைக்கு சென்றதனை விழாவாகக் கொண்டாடினர், ஆயினும் 8-ம் நூற்ருண்டில் தான் அன்னையின் 'விண்ணேற்பு' என்ற பெயரில் முதன் முதலாக ஆவணி மாதம் 15-ம் திகதி விழாக் கொண்டாடப்பட்டது. 14-ம் நூற்ருண்டளவில் திருச்சபையின் அனைத்துப் பகுதிகளிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது. இவ்வாருக, திருச்சபையில் விசுவாசிகள் மத்தியில் நிலவிவந்த மரியாளின் விண்ணேற்பு பற்றிய விசுவாச மரபே நாளடைவில் திருச்சபையின் விசுவாச சத்தியமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1950-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1-ம் திகதி பரிசுத்த தந்தை 12-ம் பத்திநாதர் ''இறைவனின் மாசில்லா அன்னையும் என்றும் கன்னியுமான மரியாள், தனது இவ்வுலக வாழ்வின் முடிவில் தன் உடலோடும்

அடைந்துவிட்டாள். மரியாள் தனது உலக வாழ்வின் தொடக்க முதல் முடிவுவரை இறைவனின் அருளால் கவரப்பட்டாள். அவள் பெற்ற அருளின் நிறை வெற்றியே விண்ணேற்பு. ஒரு காலத்தில் மனித உடல் தீயது எனக் கருதப்பட்டது. ஆனல் இன்றைய காலத்தில் மனித உடல் வெறும் விளம்பரப் பொருளாக மாற்றப்பட்டுவிட்டது. மனித உடல் பற்றிய இந்த இரு கண்ணோட்டங்களுமே குறுகியவைதான்.

அருட்திரு.
யோ. கமிலஸ் நிமலன்
புனித பிரான்சிஸ் சவோரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை.

திருமுழுக்கு எனும் அருட்சாதனத்திஞல் மனித உடலானது தூய ஆவியின் ஆலயமாக உயர்த்தப்பெறுகிறது. இறைவனில் நாம் கொள்ளும் விசுவாச வாழ்விஞல் படிப்படியாக இறைத்தன்மையில் வளர்ச்சியடைகிறது. ஆயினும் உலக முடிவில் மகிமையான உயிர்த்தெழுதலின் மூலமாகத்தான் ஆவிக்குரிய உடலாக முழு நிறைவை அடையமுடியும். இதற்கு மரியாளின் விண்ணேற்பு ஒரு முன்னடையாளம். வன்முறைகள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் அழிவுதான் நமது முடிவோ என்று அவநம்பிக்கையில் ஏங்கும் மனிதனுக்கு அன்னையினது விண்ணேற்பு இறைநம்பிக்கையில் உருவெடுக்கும் விடிவு காலத்தைப் பறைசாற்றுகிறது. நாமும் பரிசுத்த கன்னிமரியாளைப்போன்று நமது விசுவாச வாழ்வின் முழுநிறைவை எட்டிப்பிடிக்க அவளது சக்திமிக்க பரிந்துரையை நம்பிக்கையுடன் நாடுவோமாக.

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

# “மீட்பரின் அன்னை”

## திருத்தந்தையின் சுற்றுமடல் (26)

பெண்கள் மரியாளை நோக்குவதன்மூலம் தமது பெண்மையை மாண்புடன் வாழ்வதற்கும் தமது உண்மையான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கும் உரிய இரகசியத்தை மரியாளிலே கண்டுகொள்வார்கள் எனக் கூறலாம். மரியாளின் ஒளியில் திருச்சபை பெண்களின் வதனங்களில் மனித இதயத்தின் மேலான உணர்வுகளை வெளிக்காட்டும் அழகின் பிரதிபலிப்பையே காண்கிறது. அதாவது, தன்னையே முழுமையாகக் கையளிக்கும் அன்பு, பெரும் துயரங்களையும் தாங்கிக் கொள்ளும் வல்லமை, அளவு கடந்த பிரமாணிக்கம், பணியில் சோர்வுறாத ஆர்வம், ஆதரவம் ஊக்கமும் ஊட்டும் வார்த்தைகளுடன் அகத்திற உணர்வையும் இணைக்கும் தகுதி, என்பனவாகும்.

47. இரண்டாம் வத். சங்கத்தில் 6ஆம் சின்னப்பர் மரியாள் திருச்சபையின் தாய் என்பதைப் பிரகடனம் செய்தார். அதாவது, அவள் விசுவாசிகளுக்கு மட்டுமல்ல, மேய்ப்பர்களுக்கும் எல்லா கிறிஸ்தவமக்களுக்கும் தாயாக விளங்குகிறாள் என்பதையே. பின்னர் 1968ஆம் ஆண்டில் “இறை மக்களின் விசுவாசப் பிரமாணம்” என அழைக்கப்படும் விசுவாசப் பிரமாணத்தில் இவ்வுண்மையை திருத்தந்தை இன்னும் ஆணித்தரமாகப் பின்வருமாறு எடுத்துரைத்தார்; “புதிய ஏவாளும், திருச்சபையின் தாயுமான மகா பரிசுத்தமுள்ள இறை அன்னை கிறிஸ்துவின் உறுப்பினர்களைப் பொறுத்த மட்டில், மீட்கப்பட்ட ஆன்மாக்களினது இறைவாழ்வின் பிறப்பிலும் வளர்ச்சியிலும் தனது தாய்க்குரிய பணியினால் விண்ணகத்தில் இருந்து கொண்டே தொடர்ந்தும் ஒத்துழைக்கின்றாள்.”

தூய கன்னியாம் கிறிஸ்துவின் அன்னையைப் பற்றிய உண்மையானது திருச்சபை பற்றிய உண்மையை ஆழமாக ஆராய்வதற்குப் பயனுள்ள உதவியாக உள்ளது என சங்கப் படிப்பினை வலியுறுத்துகிறது. சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட “திருச்சபை பற்றிய கொள்கைத் திரட்டு” பற்றி உரையாற்றியபோது 6-ம் சின்னப்பர் இவ்வாறு கூறினார்: “தூய கன்னிமரியாள் பற்றிய உண்மையான கத்தோலிக்க கோட்பாட்டின் அறிவானது கிறிஸ்துவினதும் திருச்சபையினதும் மறைபொருள் குறித்துத் தீர்க்கமாகப் புரிந்துகொள்வதற்கு எப்போதும் திறவுகோலாகவுள்ளது.” மரியாள் திருச்சபையின் அன்னையாகவும் அதே வேளையில் மீட்பின் மறைபொருளில் அப்போஸ்தலரான அருளப்பரில் மனுக்குலத்திற்குத் தரப்பட்ட அன்னையாகவும் திருச்சபையில் பிரசன்னமாக இருக்கிறாள். இவ்வாறு, ஆவியிலே தனது புதிய தாய்மை மூலமாக, திருச்சபையிலுள்ள ஒவ்வொருவரையும் அரவணைக்கிறாள். அத்தோடு திருச்சபையினூடாகவும் ஒவ்வொருவரையும் அரவணைக்கிறாள். இவ்விதமாக திருச்சபையின் அன்னையாகிய மரியாள் அதன் மாதிரியாகவும் விளங்குகிறாள். உண்மையில் 6-ம் சின்னப்பர் நம்புவதும் நம்மிடம் கோருவதும் எதுவெனில், “திருச்சபை இறைவனின் கன்னித்தாயிடமிருந்து கிறிஸ்துவைக் கண்டுபாவிக்கும் உண்மையான முழுமையான வழிவகையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்” என்பதேயாகும்.

கிறிஸ்துவின் அன்னையையும் திருச்சபையையும் இணைக்கும் இந்த விசேட உறவு காரணமாக, ஆதியாகமத்தின் முதல் அத்தியாயங்களிலிருந்து திருவெளிப்பாட்டு ஆகமம் வரை, மனித இனத்திற்கான இறைவனின் மீட்புத்திட்டத்தின் வெளிப்படுத்தலோடு இணைந்து வரும் “பெண்ணைப் பற்றிய மறைபொருள் விளக்கம் பெறுகிறது. ஏனெனில், திருச்சபையில் மீட்பரின் அன்னையாகப் பிரசன்னமாயிருக்கும் மரியாள், மனித வரலாறு முழுவதிலும் தொடர்ந்துகொண்டிருக்கும் “இருளின் சக்திகளுக்கெதிரான பாரிய போராட்டத்தில்” (இ. உ. தி. 37) பங்கெடுக்கிறாள். “கதிரவனை ஆடையாக அணிந்திருக்கும் பெண்” (திருவெளி. 12:1) என அவளைத் திருச்சபை இனங்கண்டு கொள்வதால் திருச்சபை அதி பரிசுத்த கன்னியில் ஏற்கெனவே முழு நிறைவை அடைந்துவிட்டது; இதன் காரணமாக திருச்சபை கறைதிரை எதுவுமின்றித் திகழ்கிறது என்று கூறலாம். எனவே, கிறிஸ்தவர்கள் தமது இவ்வுலகப் பயணத்தின்போது விசுவாசத்துடன் மரியாளைக் கண்ணோக்கும்போது, அவர்கள் புனிதத்துவத்தில் முன்னேற முயற்சி செய்கின்றனர்” (திரு. 65) சீயோனின் மாட்சியடைந்த மகளான மரியாள் தனது பிள்ளைகள் எல்லாரும், அவர்கள் எங்கிருந்தாலும், அவர்களின் நிலை எப்படியிருந்தாலும், கிறிஸ்துவில் தந்தையின் இல்லத்திற்கான வழியை கண்டுபிடிக்க அவர்களுக்கு உதவுகிறாள்.

இவ்வாறு திருச்சபை தனது வாழ்நாள் முழுவதும் இறைவனின் அன்னையோடு ஒரு தொடர்பைக் கடைப்பிடிக்கிறது. இத்தொடர்பானது மீட்பின் மறைபொருளில் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய அனைத்தையும் அரவணைத்து, அவளை மனித இனத்தின் ஆன்மீக அன்னையாகவும், அருள் வேண்டிப் பரிந்துரைப்பவளாகவும் ஏற்று வணக்கம் செலுத்துகிறது.

### 3. மரியாளின் ஆண்டின் பொருள்

48. மனித இனத்துக்கும் இந்த அன்னைக்குமிடையிலுள்ள விசேட தொடர்பே, கிறிஸ்து பிறந்து ஈராயிரம் ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னதாகவுள்ள இக்கால கட்டத்தில், திருச்சபையில் மரியாளின் ஆண்டினைப் பிரகடனம் செய்ய என்னைத் தூண்டியது. இது போன்ற முயற்சி கடந்தகாலத்திலும் எடுக்கப்பட்டது. 1854 இல். அதாவது சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பிரகடனஞ்செய்யப்பட்ட மரியாளின் அமல உற்பவம், மற்றும் அவளது விண்ணேற்பு பற்றிய மறைபொருட்களினால் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் அன்னையினது மேலான புனிதத்துவத்தை வலியுறுத்துமுகமாக 12-ம் பத்திநாதர் 1954-ம் ஆண்டினை மரியாளின் ஆண்டாகப் பிரகடனம் செய்தார்.

இரண்டாவது வத். சங்கத்தின் வழியைப் பின்பற்றி கிறிஸ்துவினதும் அவரது திருச்சபையினதும் மறைபொருளில் இறை அன்னையின் விசேடமான பிரசன்னத்தை வலியுறுத்த நான் விரும்புகிறேன். சங்கம் முடிவடைந்து இருபது ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டாலும் சங்கத்தின் மரியாள் பற்றிய படிப்பினையிலிருந்து வெளியாகும் அடிப்படைக்கொள்கை இதுவாகும். 1985ல் நடைபெற்ற விசேட ஆயர் பேரவையானது சங்கப் படிப்பினைகளையும், வழிகாட்டுதல்களையும் ஒவ்வொருவரும் பிரமாணிக்கத்துடன் கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்தியது. இவ்விரு நிகழ்வுகளும் (சங்கம், ஆயர் பேரவை) வரலாற்றின் இன்றைய காலகட்டத்தில் தூய ஆவியானவர் திருச்சபைக்கு எடுத்துக்கூற விரும்பியவற்றிற்கெல்லாம் உருவம் கொடுத்துள்ளன என நாம் கூறலாம்.

இச்சந்தர்ப்பத்தில், கிறிஸ்துவினதும் திருச்சபையினதும் மறைபொருளில் இறைவனின் அன்னை தூய கன்னிமரியாள் பற்றிச் சங்கம் கூறியவற்றை இன்னும் கவனமாகக் கற்றுக் கொள்வதற்காகவே மரியாளின் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பொதுத் திருமுகத்தின் பொருளும் இதுபற்றியதாகவே உள்ளது. இதில் விசுவாசக் கோட்பாடு பற்றி மட்டும் நாம் பேசவில்லை, விசுவாச வாழ்வு பற்றியும் பேசுகிறோம். இவ்வாறு பாரம்பரியத்தின் ஒளியில் நாம் காணும் உண்மையான மரியாள் வழி அருள் வாழ்வுக்குத் திருச்சபை நம்மைத் தூண்டுகிறது. மேலும் மரியாள் வழி அருள் வாழ்வானது மரியாள் பக்தியைப் போன்று உலகின் பல்வேறு மக்கள் நாடுகள் மத்தியிலுமுள்ள தனிப்பட்டவர்களினதும், பல்வேறு கிறிஸ்தவ குழுக்களினதும் வரலாற்று அநுபவத்திலிருந்து வளம் மிக்க ஊற்றைக் கொண்டுள்ளது. இந்த அருள்வாழ்வு வழி சம்பந்தமான பல்வேறு சாட்சிகள், ஆசான்களுள் புனித லூயிஸ் மரிய கிறிஞ்ஞோன் டி மொன்போட் என்பவர் கிறிஸ்தவர்கள் தங்கள் திருமுழுக்கின் வாக்குறுதிகளைப் பிரமாணிக்கத்துடன் வாழ்வதற்குப் பலனுள்ள வழிமுறையாக மரியாளின் கரங்களினூடாகக் கிறிஸ்துவிற்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று கோருகிறார். எமது காலத்திலும்கூட இந்த அருள் வாழ்வு வழியினதும் வணக்க முறையினதும் புதிய வெளிப்பாடுகள் தோன்றியுள்ளன என்பதைக் கண்டு பூரிப்படைகிறேன்.

இவ்வாறு. இந்த மரியாளின் ஆண்டுச் சந்தர்ப்பத்திலே சிந்திப்பதற்கும் பின்பற்றுவதற்கும் பல வலுவான சிந்தனைக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

49. இந்த மரியாளின்ஆண்டு யூன் மாதம் 7-ம் திகதி. பெந்தகோஸ்து திருவிழாவுடன் ஆரம்பமாகும். மனித குலத்தின் வரலாற்றிலே ஆண்டவராகிய கிறிஸ்துவின் வருகைக்கு முன்னதான மரியாளின் வருகையை நினைவுகூருவது மட்டுமல்ல, மரியாளின் ஒளியில், மனித வரலாற்றில் இறைவன் மனுவுரு எடுத்த மறைபொருள் நிறைவேறியது முதல், மனித வரலாறு “காலத்தின் நிறைவினுள்” நுழைந்துவிட்டதை வலியுறுத்துவதுமாகும். இந்த நிறைவின் அடையாளமே திருச்சபை. பெந்தகோஸ்து நாளன்று ஆரம்பமாகிய திருச்சபை இறைமக்கள் கூட்டமாக நித்தியத்திற்கான தனது பயணத்தை அனைத்து மக்கள், தேசங்கள் மத்தியில் விசுவாசத்தின் மூலம் மேற்கொண்டு வருகின்றது. திருச்சபையின் காலம் தொடங்கிய வேளையில் கிறிஸ்துவின் தாய் பிரசன்னமாய் இருந்தாள். அப்போஸ்தலர்கள், மற்றும் அவளது திருமகனின் சீடர்கள் தூய ஆவியின் வருகைக்காக காத்திருந்தபோது அவர்கள் மத்தியில் அவளும் செபத்தில் ஈடுபட்டிருந்தாள். மனித வரலாற்றில் திருச்சபை மேற்கொள்ளும் பயணத்தின்போது மரியாள் திருச்சபைக்கு முன் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கின்றாள். ஆண்டவரின் அடிமை என்ற வகையில் தனது திருமகன் கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட மீட்பு அலுவலில் இடைவிடாமல் ஒத்துழைக்கிறவளும் அவளே.

இவ்வாறு இந்த மரியாளின் ஆண்டின் மூலம், திருச்சபையானது ஆண்டவராகிய கிறிஸ்துவின் மீட்பு அலுவலில் இறை அன்னையின் விசேடமான தாய்க்குரிய ஒத்துழைப்புக்குச் சான்று பகரும் யாவற்றையும் மீண்டும் நினைவுகூருவது மட்டுமன்றி, தன்னைப் பொறுத்த மட்டில் எதிர்காலத்தில் இத்தகைய ஒத்துழைப்புக்கு வழிகளைத் தயார்படுத்தவும் அழைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், கிறிஸ்தவ ஈராயிரம் ஆண்டுகளின் முடிவானது ஒரு புதிய வாய்ப்பினைத் தொடங்கி வைக்கின்றது.

50. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, எமது பிரிந்த சகோதரர்களிடையேயும் பலர், குறிப்பாகக் கீழைத் திருச்சபையினர், ஆண்டவரின் அன்னைக்கு வணக்கம் செலுத்திக் கொண்டாடுகின்றனர். இது கிறிஸ்தவ ஒன்றிப்பின்மீது வீசப்படும் மரியாளின் ஒளி எனலாம். குறிப்பாக, மரியாளின் ஆண்டின்போது கியேவ் (Kiev) நகரின் கோமகனாகிய புனித விளாடிமீர் உடைய திருமுழுக்கின் ஆயிரம் ஆண்டு நிறைவும் இடம்பெறுகிறது (988) என்பதனை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது அக்காலத்தில் றூஸ் என அழைக்கப்பட்ட நாட்டின் பகுதிகளிலும் அதனைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளிலும் கிறிஸ்தவ மறை தொடங்கியதைக் குறிக்கிறது. இவ்வாறு மறைபரப்புப் பணி வழியாக கிறிஸ்தவ மறையானது ஐரோப்பாவுக்கு அப்பால், ஆசியாக் கண்டத்தின் வடக்குப் பகுதிகள் வரை பரவியது. இத்திருமுழுக்கின் ஆயிரம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் அனைத்து கீழைத் திருச்சபையினர், கத்தோலிக்கருடன் நாமும் இந்த ஆண்டிலே செபத்தின் வழியாக ஒன்றிணைய விரும்புகிறோம். “கீழைக் கிறிஸ்தவர்கள் எப்போதும் ஆர்வமிக்க உணர்வோடும் இறைபற்றுள்ள உளத்தோடும் என்றும் கன்னியான இறை அன்னைக்கு வணக்கம் செலுத்துகிறார்கள்” (திரு.69) எனும் சங்கத்தின் மகிழ்ச்சிகரமான, மனநிறைவு தரும் வாழ்த்துக்களை நாமும் மீண்டும் கூறி உறுதிப்படுத்துகிறோம். பல்லாண்டுகளுக்குப் பின் (1054) ஏற்பட்ட பிரிவினையின் காரணமாக வேதனையான விளைவுகளை நாம் இன்னமும் அனுபவித்தாலும், உலகிலே ஒரே குடும்பமாக இருக்க அழைக்கப்பட்டுள்ள மெசியா கால மக்கள் மத்தியில் கிறிஸ்துவின் அன்னையின் பிரசன்னத்தினால் நாம் உண்மையான சகோதரர்கள் என்பதனை உணருகிறோம். புத்தாண்டின் தொடக்கத்தில் நான் அறிவித்ததுபோல “உலகிலுள்ள எல்லா மக்களினதும் இவ்வுலகளாவிய உரிமைச் சொத்தினை மீண்டும் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.”

மரியாளின் ஆண்டை அறிவித்தபோது அது அடுத்த ஆண்டில் தூய கன்னி விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருவிழாவுடன் முடிவடையும் என்று குறிப்பிட்டிருந்தேன். இது திருவெளிப்பாட்டு ஆகமத்தில் கூறப்பட்டிருக்கும் “விண்ணில் தோன்றிய பெரிய அறிகுறியை” வலியுறுத்துமுகமாகவே ஆகும். இவ்விதமாக “நிச்சயமான நம்பிக்கையின் அடையாளமாகவும், பயணம் செய்யும் இறைமக்களின் ஆறுதலாவும்” மரியாளைக் கண்ணோக்கும் சங்கத்தின் அறிவுரைக்கு நாம் பதிலளிக்க விரும்புகிறோம். சங்கமானது இவ்வறிவுரையைப் பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தியது: “இறைவனுக்கு மக்களுக்கும் தாயான கன்னிமரியாள் தன் செபங்களால் தொடக்ககாலத் திருச்சபைக்கு உதவினாள். அதுபோலவே, எல்லாப் புனிதருக்கும் வானவருக்கும் மேலாக விண்ணுலகில் உயர்த்தப்பட்டிருக்கும் இவள், இப்போதும்கூட புனிதர் அனைவருடனும் ஒன்றித்துத் தன் திருமகனிடத்தில் பரிந்துபேசவேண்டும்; கிறிஸ்தவர் என்னும் பெயரால் அணிசெய்யப் பெற்றவராயினும்சரி, கிறிஸ்துவை இன்னும் அறியாதவராயினும்சரி, யாவரும் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் ஒரே இறைமக்கள் குலமாக, மிகத் தூய, பாகுபடா மூவொரு கடவுளின் மாட்சிமைக்காக மகிழ்வுடன் கூடும் காலம்வரை அவள் தொடர்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# மீட்பரின் அன்னை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ந்து பரிந்து பேசவேண்டும்; இதற்காக கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் தொடர்ந்து தம் விண்ணப்பங்களை அவளை நோக்கி எழுப்புவார்களாக' (திரு. 69).

முடிவுரை

தினசரி திருப்புகழ்மாலையின் முடிவில் மரியாளுக்குச் சமர்ப்பிக்கப்படும் திருச்சபையின் வேண்டுதல்களில் பின்வருமாறு கூறப்படுகிறது:

"மீட்பரின் அன்பான அன்னையே
விண்ணகத்தின் வாயிலே, ஆழி
விண் மீனே
வீழ்ந்துவிட்ட உனது மக்கள் மீண்டும்
எழுந்திடத் துணைபுரிவாய்,
இயற்கையே வியப்புறும் வண்ணம்
உன்னைப் படைத்தவரையே
ஈன்றெடுத்தாய்''

"இயற்கையே வியப்புறும் வண்ணம்" எனும் பதிலுரைப் பாடலின் வார்த்தைகள் மரியாளின் தெய்வீகத் தாய்மைப் பேறு மறைபொருளுடன் கூடிச் செல்லும் விசுவாசத்தின் வியப்பையே வெளிப்படுத்துகிறது. இது ஒரு விதத்தில் முழுப் படைப்பின் உள்ளத்திலும் நேரடியாக முழு இறை மக்கள் கூட்டத்தின் உள்ளத்திலும், திருச்சபையின் உள்ளத்திலும் இவ்வாறே வியப்பை ஏற்படுத்துகிறது. ஆம், எல்லாவற்றையும் படைத்தவரும் ஆள்பவருமான கடவுள் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்துவதற்காக அதிசயிக்கும் வகையில் எவ்வளவு தூரம் சென்றுவிட்டார்! படைத்தவரையும் படைப்பையும் பிரிக்கும் அளவில்லாத தூரத்தின் இடைவெளியை எவ்வளவு தெளிவாக அவர் இணைத்துவிட்டார்! அவர் தம்மிலேயே சொல்லுக்கப்பாற்பட்டவராகவும் தேடி அடையமுடியாதவராகவும் இருப்பினும், வார்த்தையானவர் மனுவுருவெடுத்த நிகழ்விலே அவர் இன்னுமதிக சொல்லுக்கப்பாற்பட்டவராகவும் தேடி அடைய முடியாதவராகவும் ஆகுகிறார். வார்த்தையானவர் நசரேத்தூர்க் கன்னி வழியாகவே மனிதனானார்.

மனிதன் இறையியல்பில் பங்குகொள்ளவேண்டுமென இறைவன் நித்தியமாகவே விரும்பி அழைத்தாராயின், மனிதனின் 'இறைமயமாக்குதலை மனித இனத்தின் வரலாற்று நிலைமைகளுடன் பொருந்தச் செய்தார் என்றே கூறவேண்டும். இதன் காரணமாகத்தான் பாவத்தின் பின்னரும் பெரும் விலைகொடுத்து, அதாவது தமது திருமகனை "மனிதமயமாக்குதலின்" மூலமாக, தமது அன்பின் முடிவில்லாத திட்டத்தை மீண்டும் நிலைநாட்டினார். படைப்பு முழுவதும், இன்னும் நேரடியாக மனிதனும் தூய ஆவியில் பங்காளியாகிவிட்ட கொடையைக் கண்டு வியப்புறாமல் இருக்க முடியாது: "தமது ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவிற்கு இறைவன் உலகின் மேல் அன்புகூர்ந்தார்" (அரு: 3:16) இறைமறை பொருளின் மையமாக, இந்த விசுவாச வியப்பின் மத்தியிலே மரியாள் நிற்கின்றாள். மீட்பரின் அன்புமிக்க அன்னையாக இதனை முதலில் அனுபவித்தவள் அவளே: "இயற்கையே வியப்புறும் வண்ணம் உன்னைப் படைத்தவரையே ஈன்றெடுத்தாய்."

52. திருவழிபாட்டுப் பதிலுரையில் காணப்படும் இவ்வார்த்தைகளை 'இறைவன் மனுவுருவானார்' என்னும் மறைபொருள் மனிதனுக்காக நிலைநாட்டிய 'மாபெரும் உருமாற்றம்' எனும் உண்மையை எடுத்துரைக்கிறது. ஆதியாகமத்தின் முதல் அதிகாரங்களில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றிலிருந்து தொடங்கி இறுதி முடிவுவரை, அதாவது "நாளும் நேரமும் உங்களுக்குத் தெரியாது" (மத் 25:13) என இயேசுவினால் கூறப்பட்டிருக்கும் உலக முடிவுவரை, இந்த உருமாற்றம் மனிதனது முழு வரலாற்றுக்குமே உரியதாகும். இது வீழ்வதற்கும் மீண்டும் எழுவதற்கும் இடையில் பாவத்தின் மனிதனுக்கும் அருளினதும் நீதியினதும் மனிதனுக்குமிடையில் நடைபெறும் முடிவடையாத தொடர்ச்சியான உருமாற்றமாகும். திருவருகைக்காலத் திருவழிபாடு இத்தகைய உருமாற்றத்தின் மையக் கருத்தினையே சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் 'இப்போது, இங்கே' எனும் அதனது இடைவிடாத சிந்தனையைத் தனதாக்கிக்கொண்டு "வீழ்ந்தாலும் மீண்டும் எழ முயலும் உமது மக்களுக்கு உதவியருளும்!" என குரலெழுப்புகிறது.

இந்த வார்த்தைகள் ஒவ்வொரு தனிமனிதனுக்கும், ஒவ்வொரு குழுவுக்கும், தேசங்களுக்கும் மக்களுக்கும், தலைமுறைகளுக்கும். மனித வரலாற்றின் சகாப்தங்களுக்கும், எமது சொந்தச் சகாப்தத்திற்கும், முடிவடைய இருக்கும் இந்த ஆயிரம் ஆண்டுகளுக்கும் பொருந்தும்: "உதவியருளும்: ஆம், வீழ்ந்துவிட்ட உமது மக்களுக்கு உதவியருளும்."

இவ்வாறான வேண்டுதல்தான் மீட்பரின் அன்புத்தாயாகிய மரியாளிடம் எழுப்பப்படுகிறது. இதே வேண்டுதல்தான் மரியாள் மூலமாக மனித வரலாற்றினுள் நுழைந்த இயேசுவிடமும் எழுப்பப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவமுள்ள உருமாற்றத்தை நிலைநாட்டிய கணத்தை நினைவுபடுத்தும் இப்பதில் பாடலானது ஆண்டுதோறும் மரியாளை நோக்கி எழுப்பப்படுகிறது. வீழ்ச்சியிலிருந்து எழுச்சிக்கான இந்த உருமாற்றம் பின்னடையாமல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

மனித இனம் வியத்தகு கண்டுபிடிப்புக்களையும், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் ஆச்சரியத்துக்குரிய விளைவுகளையும் சாதித்துள்ளது. வளர்ச்சி, நாகரிகம் என்னும் பாதையில் பெரும் முன்னேற்றங்களை அடைந்துள்ளது. அண்மைக் காலங்களில் வரலாற்றின் வேகத்தையே அதிகரிக்குமளவுக்கு வெற்றி பெற்றுள்ளது எனலாம். "முதலாவது" என்று நாம் அழைக்கக்கூடிய அடிப்படை உருமாற்றமானது மனிதனது பயணத்தில் உடன் செல்கிறது. அத்துடன், வரலாற்றின் எல்லா நிகழ்வுகளினூடாகவும் ஒவ்வொரு தனிமனிதனோடும் உடன்செல்கிறது. வீழ்ச்சியிலிருந்து எழுச்சிக்கான, சாவிலிருந்து வாழ்விற்கான உருமாற்றமே இது. இது மக்களின் மனச்சான்றுகளுக்கு ஒரு தொடர்ச்சியான சவாலாகவும், மனிதனது முழு வரலாறு பற்றிய சிந்தனைகளுக்கு ஒரு சவாலாகவும், எப்போதும் பழையதும் புதியதுமான வழிகளில் வீழ்ந்துவிடாமல் இருக்க உதவும் வழியைப் பின்பற்றவும், ஒருமுறை வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்திருக்கவும் இது ஒரு சவாலாக இருக்கிறது.

திருச்சபையானது முழு மனித இனத்துடன் ஈராயிரம் ஆண்டுகளின் எல்லையை நோக்கி முன்னேறிச் செல்லும் போது, தன்னைப் பொறுத்த மட்டில், அனைத்து விசுவாசிகளின் குழுவுடனும், நல்லெண்ணம் படைத்த அனைத்து ஆண்கள், பெண்களுடனும் ஒன்றிணைந்து, "வீழ்ந்துவிட்ட மக்கள் மீண்டும் எழ முயல்கின்றனர்" என்னும் மரியாளின் பதிலுரைப்பாடலின் வார்த்தைகளில் பொதிந்துள்ள பெரும சவாலை ஏற்றுக் கொள்கிறது. அத்துடன் மீட்பரையும் அவரது அன்னையையும் நோக்கி "எமக்குத் துணையாக வாருங்கள்" என்றும் விண்ணப்பிக்கிறது. இச்செபம் சான்று பகருவது போல் இறைவன் தூய அன்னையை கிறிஸ்துவினது மீட்பின் மறைபொருளிலும் அவளது சொந்த மறைபொருளிலும் திருச்சபை காண்கிறது. ஆதியிலிருந்தே இறைவன் மனிதனுக்காக உருவாக்கிய பராமரிப்புத் திட்டப்படி திருச்சபையானது மரியாளை மனித இனத்தின் வரலாற்றிலே, மனிதனது நித்திய அழைத்தலோடு இணைந்தவளாகவே காண்கிறது. இன்று தனிப்பட்டவர்களின், குடும்பங்களின், தேசங்களின் வாழ்வினைப் பாதிக்கும் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளில் தனது தாய்மையால் பிரசன்னமாகிப் பங்கெடுப்பவளாகவே திருச்சபை மரியாளைக் காண்கிறது. நன்மைக்கும் தீமைக்கும் இடையில் நிகழும் தொடர்ச்சியான போராட்டத்தில் கிறிஸ்தவ மக்களுக்கு உதவுவதிலும், வீழ்ந்துவிடாமல் பார்க்கவும், அவ்வாறு வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்திருக்கவும் அவள் உதவுகிறாள்.

இந்தப் பொதுத் திருமுகத்தில் அடங்கியிருக்கும் சிந்தனைகள் அனைத்து விசுவாசிகளின் இதயங்களிலும் இத்தகைய கண்ணோட்டத்தைப் புதுப்பிக்க உதவும் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்

உரோமையின் ஆயர் என்ற வகையில் இந்தச் சிந்தனைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான முத்தம் தந்து, எங்கள் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் எனது வாழ்த்தையும் ஆசீரையும் வழங்குகின்றேன். ஆமென்.

இப்பொதுத் திருமுகம் உரோமையில் புனித இராயப்பர் பேராலயத்தில் 1987-ம் ஆண்டு மார்ச் 25-ம் நாள் ஆண்டவரது மனுவுருவெடுத்தலின் பெருவிழாவன்று, எமது திரு ஆட்சியின் 9-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

2ஆம் அருளப்பர் சின்னப்பர்.

சிறுகதை:-

# புலர்ந்த மனம்

—ரேகான் அன்ரனி—
(உயிலூர்)

பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. இரவு விடியலுக்கு முத்தம் கொடுத்து விடைபெற்றுக் கொண்டிருந்தது. ரவியின் மனமோ விடியலைச் சந்திக்கக்கூடிய அமைதியான நிலையில் இல்லை. தாயின் குரல் கேட்டு" சே! என்ன வாழ்க்கை இது!" என்று மனம் சலித்தவாறே படுக்கையை விட்டு எழுந்திருந்தான். அவன் வசிக்கும் பகுதியில் சீருடைகளின் நடமாட்டம் அதிகரித்திருந்தமையால் ஒவ்வொரு விடியற்காலைப்பொழுதும் அவனது மனதிற்கு அமைதி கொடுக்கக்கூடியவடியலாக, அச்சமின்றிச் சுதந்திரமாக உலாவி வரத் துணை செய்யும் காலைப்பொழுதாக அமையாதது அவனது இளமைப்பருவ வாழ்விலே மகிழ்ச்சியைவிடச் சலிப்பையே ஊட்டியது. எத்தனையோ ஏக்கங்களுடனும், எதிர்பார்ப்புகளுடனும் கற்பனை உலகில் சஞ்சரித்து எத்தனையோ மனக்கோட்டைகளைக் கட்டி வாழும் அவனது இளமைப்பருவம் வரயமாகிவிட்டதே என்ற நெஞ்சின் ஆதங்கம் அவனை நலருக வாட்டியது. என்னைப் போன்ற எத்தனையோ இளைஞர்களின் வாழ்க்கையும் இன்றைய சூழலில் இப்படியாகிவிட்டதே என்று எத்தனையோ தடவைகள் விரக்தியாக அவன் சிந்தித்ததுண்டு. "ரவி, இன்றைக்கு வகுப்புக்குப் போகவில்லையா?" என்ற தாயின் குரல்கேட்டு தன் சிந்தனைகளினின்று விடுபட்டவனாக கிணற்றடிப் பக்கம் சென்றான். ரவி (A/L) படித்துவிட்டு இப்போது தனியார் 'ரியூட்டரி' ஒன்றில் மூன்றுமாத 'கொம்பியூட்டர்' பயிற்சி பெற்று வருகின்றான். பயிற்சி முடித்துவிட்டு வெளிநாடு சென்று உழைக்கவேண்டும். என்பதே அவனது இலட்சியம். அவன் பயிற்சி பெறும் 'ரியூட்டரி' நகரத்திற்கு அண்மையிலுள்ளபடியால் சீருடைகளின் கெடுபிடிகளின் மத்தியில்தான் அவன் சென்றுவரவேண்டும். அவன் வீட்டைவிட்டுப் புறப்படும் ஒவ்வொரு காலையிலும் அவனது தாய். "ரவி, நீ மாதாவிடம் மன்றாடிவிட்டுச் செல். உன்னைப் பாதுகாப்பாக அந்தத் தாய் வீடு கொண்டுவந்து சேர்த்திடுவா. இல்லாவிட்டால் நீ மாலை வீடு திரும்பும் வரைக்கும் நான் வயிற்றிலே நெருப்பை அள்ளிக் கொட்டிக்கிட்டு உனக்காக காத்திருக்கவேண்டியதுதான்" என்ற தாயின் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்காவிட்டாலும் தன் தாயின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து மாதாவிடம் மன்றாடிவிட்டே வீட்டை விட்டுக் கிளம்புவான் சில வேளைகளில் ரவி திடீரென நடாத்தப்படும் சீருடைகளின் சுற்றிவளைப்பில் சிக்கித், தலையாட்டிகளிடமும் தப்பி ஒருவாறு வீடுவந்து சேர்ந்துவிடுவான். இப்போதெல்லாம் ரவிக்கு இப்படியான தேடுதல்களெல்லாம் அவனுக்குப் பழக்கமாகி விட்டன. பயமில்லாமல் பதட்டமில்லாமல், சுதந்திரமாய் வெளியில் சென்று வரக்கூடிய காலம் இனி வருமா? என்ற கேள்விக் குறியுடனேயே அவன் சிந்தனை முடிந்துவிடும்.

அன்றொருநாள் அவன்வீட்டை விட்டுப் புறப்படும்போது, "ரவி இன்றைக்கு வீட்டிற்கு நேரகாலத்தோடு வந்துவிடு, எங்கட வீட்டிற்கு மாதாவின் சுரூபம் இன்றைக்கு கொண்டு வருவார்கள். நீயும் வந்தால்தான் நாங்கள் குடும்பமாகச் செபமாலை சொல்லலாம்" என்றாள் அவனது தாய், "அம்மா இன்றைக்கு மாலையிலும் ஒரு வகுப்பு இருக்கிறது, என்றாலும் முயற்சித்து நேரத்தோட வரத் தெண்டிக்கிறேன்" என்றான் ரவி "ரவி, எப்படியாகிலும் நீ இன்றைக்கு ஆசிரியரிடம் அறிவித்துவிட்டாவது நேரத்தோடு வந்துவிடு நாங்கள் கட்டாயம் உன்னை எதிர்பார்த்திருப்போம். மாதாதான் எங்களையெல்லாம் காப்பாற்றி வருகிறா என்பதை மறந்துவிடாதே" என்று சொல்லிவிட்டு அவனது தாய் சென்றுவிட்டாள். 'எல்லா இடமும் ஒரே செபமாலை சொல்லுகிறார்கள் மாதாவினுடைய சுரூபத்தையும் வீடு வீடாகக் கொண்டு திரிகிறார்கள். ஆனால் நாட்டிற்குச் சமாதானம் வந்ததா? நாங்களெல்லாம் பயமில்லாமல் திரிகிற சூழ்நிலை வந்ததா? சே! இதெல்லாம் தேவைதானா!' என்ற பல சிந்தனைகளோடு 'ரியூட்டரி'க்குச் சென்றுவிட்டான். அன்று சீருடைகளின் நடமாட்டம் வழமையைவிட நகரத்தில் அதிகரித்திருந்தது. ஏதோ ஒரு இடத்தில் சுற்றிவளைப்பாம். அதுதான் வழமையைவிட அதிகமாம் என்று யாரோ கூறியது அவனது காதுகளில் விழுந்தது எனவே அவன் வழமையாகச் செல்லவேண்டிய பாதை மாற்றப்பட்டு ஒழுங்கை, குறுக்கு வீதிகளூடாக சுற்றிவளைப்பில் சிக்காதவாறு ஒருவாறு ரியூட்டரியைச் சென்றடைந்துவிட்டான். மாலையில் வகுப்பு முடிவதற்குள்ளேயே ஆசிரியரிடம் அறிவித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது வழியில் நண்பன் சுரேஷைச் சந்தித்தான். "என்ன ரவி, இன்றைக்கு நேரத்தோட வீட்ட போறாய், ஏதும் பிரச்சினையோ?" என்று கேட்டான். "இல்லை சுரேஸ், இன்றைக்கு எங்கட வீட்டிற்கு மாதா சுரூபம் கொண்டு வாறார்கள். அதுதான் நேரத்தோட அம்மா வீட்டிற்கு வரச் சொன்னா. அதுதான் அவசர

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

இளைஞர் உலகம்

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
12-8-88




அன்பு இளம் உள்ளங்களுக்கு

இளமைக்கால மேகங்கள் கண்ணீரைச் சொட்டாமல் பன்னீரைப் பொழியட்டும். வானவில்லின் வர்ண ஜாலங்கள் அல்ல இளமைக் காலக் கோலங்கள். காரிருளின் இடையில் திடீரெனப் பளிச்சிடும் மின்னலைப் போலல்லாது தொடர்ச்சியான மகிழ்ச்சியை அனுபவிக்க விரும்புவது இளம் உள்ளங்களாகிய உங்களது இயல்பேயாகும். இந்த மகிழ்ச்சி உங்களில் நிலைக்க இறைவனோடு இணைந்த நிலையில் உங்களது வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள். உள்ளத்தின் கதவுகளைத் திறந்து விட்டு உள்ளத்தில் இறைவனை இருத்திக் கொள்ளுங்கள்.

ஆற்றல்மிகு இறைவன் உள் இருந்தால்
ஏற்றமிகு வாழ்வு உங்களுக்கே!

நல்வாழ்த்துக்களுடன்
அன்பு நெஞ்சன் வி. பி.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-28

அடைக்கலம்:- நம் நாட்டில என்ன குறை? என்ன வளம் இல்லை? எண்டு மேடையில் எங்கட பெரியவர் நல்லாப் பேசினார் அண்ணை.

குருசுமுத்தண்ணை:- ஓம், ஓம், நானும் பார்த்தனான் தொண்டை நனைக்க, இறக்குமதிச் சோடாத் தண்ணி கேட்டதை... ஏன்ரா தம்பி பேச்சை விட்டிட்டு வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை கொடுக்க எங்கட நாட்டுத் தண்ணிய குடிக்கத்தானும் ஒரு தொழிற்சாலை அமைக்கலாம் எல்லே.

## நல் இளைஞன்

நாடியவர்க் கொரு நல்லவனாய் - அவனைத்
தேடியவனுக் கொரு உத்தமனாய் — நல்
இலைத்தவர் போற்றும் நாயகனாய்
நாணியவர்க் கொரு ஏணியாய்
நாடு என்னும் தோட்டத்திலே — பல
நல்ல செயல்கள் செய்திடவும்
கூடு என்னும் குடும்பத்திலே
குதூகலமாய் வாழ்ந்திடவும் — அவனைத்
தேடுகின்ற பெண்ணொருத்தி
தெய்வமென மதித்திடவும்
நாட்டிற்கும் வீட்டிற்கும்
ஏற்றபடி நற் புத்தி கூறிடுவீர்
இயேசு புத்தர் காந்தி வழியே
புனிதம் நிறை நபியுடனும்
ஒன்றே குலம் என்று பாடி,
ஒருவனே தெய்வம் என்று போற்றி
டண்பெனும் பாசத்துடன் பழகிடுவீர்.

மேரி மாலதி ஞானரெத்தினம்
புங்குடுதீவு — 10

## இளமையின் இதய கானம்

மதிமுகம் கண்டு மலரும் மலராய்
மறையவன் வரவை மகிழ்வுடன் கண்டு
விதியை மதியால் விலக்கியே என்றும்
வருப்புடன் வாழ்வை வரையறை செய்வோம்.

வாழும் வாழ்க்கை பொன்னான காலம்
வீணே அதனை விரயம் செய்யோம்
பாழும் உலகென வெறுத் தொதுக்காது
பார்போற்றும் பண்பின் மக்களாய்த் திகழ்வோம்.

அன்பே வாழ்வின் இலட்சியம் என்போம்
ஆற்றலே எமது உயர்வெனக் கொள்வோம்
துன்பம் வாழ்வின் துணைவன் என்போம்
தூக்கத்தைக் களைத்து ஆக்கங்கள் செய்வோம்.

கற்பதே எங்கள் மேலான கடமை
கண்ணியம் காப்பதே காலத்தின் நோக்கம்
கற்பே எமது அணிகலன் என்பதால்
கட்டுப்பாட்டில் கருத்தாய் இருப்போம்.

"தமிழ் நேசன்"
புனித மாட்டினார் குருமடம், யாழ்ப்பாணம்.

[உருவகக் கதை]

## சுயம்

அணைக்கட்டின் மீது மாலை வேளைகளில் அந்த முதலை தனது வாயைத் திறந்தபடி கிடப்பது வழக்கமாகிப் போனது.

முதலையின் பற்களில் ஒட்டிக் கொண்ட இரைத் துண்டங்களை ஒரு காகம் தன் அலகுகளால் கொத்தி எடுத்துத் தனக்கு உணவாக்கிக் கொள்ளும்.

இது சில வாரங்களாக நடந்து வந்ததை அந்தக் காகத்தின் சோடிக் காகமும் பார்த்துக் கொண்டே வந்தது. அன்றும் வழமைபோல முதலையின் திறந்த வாயில் அந்தக் காகம் ஒட்டிய சதைத் துணிக்கைகளைக் கொத்தி எடுத்துக் கொண்டிருந்தது. முதலையின் முதுகில் இருந்த சோடிக் காகம் "நீ நெருப்புடன் விளையாடுகிறாய்" என்று சொன்னது.

துணிக்கைகளைக் கொத்திய காகம் "முதலை எனது நண்பன்" என்றது

"நண்பனுக்கும் பகைவனுக்கும் பேதம் தெரியாமல் இருக்கின்றாய்... வீணாக விபரீதத்தை விலைக்கு வாங்கப் போகிறாய்" என்றது சோடிக்காகம்.

"உனக்கு எல்லோர் மீதும் சந்தேகம் தான்" துணிக்கையைப் பொறுக்கியபடியே காகம் கூறியது.

மறுநாள் சோடிக் காகம் அணைக்கட்டின் மறுபுறத்தில் இருந்தது.

முதலையின் திறந்த வாய்க்குள் துணிக்கைகளைக் கொத்தச் சென்ற காகம் கொத்தத் தொடங்கியதும் முதலை வாயை மூடிக் கொண்டு நீருக்குள் மூழ்கி மறைந்தது.

சோடிக் காகம் யாருக்குச் சொல்லி அழ என்றவாறு துஷ்டரின் சுயத்தை நினைத்தவாறு எழுந்து பறந்தது.

வளவை வளன்

## பொன்மொழிக் களஞ்சியம

★ தெய்வபக்தி உண்மையானால் பரோபகாரமே அங்கே இருக்கும். பரோபகாரம் இல்லாத இடத்தில் தெய்வபக்தி வேஷத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை.

— பாரதி

★ பசியும் ஆசையும் இருப்பதால் தான் உலகமே ருசிக்கிறது. பசியும் ஆசையும் அற்றவனுக்கு உலக வாழ்க்கையே இல்லை.

— சாகர்ள்

★ உன் திறமையாலோ சாமர்த்தியத்தாலோ பணத்தாலோ நீ வெற்றியடைந்ததாக எண்ணாதே. எல்லாம் அவன் செயலால் தான் நடக்கிறது.

— ராஜ்.

★ மெதுவாய்ப்பேசு, இனிமையாகப் பேசு, சுருக்கமாகப் பேசு, மெய்யே பேசு, அன்பாய்ப் பேசு, பணிவுடன் பேசு சிந்தித்துப் பேசு, மௌனம் கடைப்பிடி

தொகுப்பு—ரட்ணராஜ்
இளவாலை



## "மணவாளனின் மதிப்பு"

அருள் வழிச் செல்லும் அறிவுடையவனாய்ச் சான்றோர் போற்ற வாழும் திருவுடையவனாய் இறைவன் திருவருட் குறிப்பின் வண்ணம் வாழ்க்கை நடத்தும் இயல்புடையவனாய் இருப்பவனே கணவன். இந்த இயல்பு ஒருவனுக்குத் தோன்ற அடிப்படைக் காரணம் இல்லறமே! இல்லறமே நல்லறம் என்ற ஆன்றோரின் அறிவுரைப்படி வாழ்கின்றவன் கணவன். குடும்பத்தினால் மட்டுமே இந்தப் புகழ்மிக்க நிலையை அடைவதற்கு ஒருவன் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த மேம்பாட்டிற்கு மனைவியே காரணமாக இருக்கிறாள். வீணையும் நாதமும் போல, யாழும் இசையும் போல, வானும் நிலவும் போல, கண்ணும் இமையும் போல, உடலும் உயிரும் போல இணை பிரியாது வாழ்ந்து காட்ட வேண்டிய கடமை கணவனிடமே உள்ளது. வாழ்த்தொலி, இதயவொலி, மகிழ் ஒலி பொங்க கைப்பிடித்துத் திருமணம் செய்து கொண்ட நாயகன் நானிலம் போற்றும் நற்பண்பாளனாக விளங்கவேண்டும் இனிய நற்பண்புகளாலும் அன்போடு கலந்த நற்செயல்களாலும் நன்மை பெற்றவனாய், கல்வியில் தேர்ந்தவனாய், கற்றவர்களிடத்தில் நன்மதிப்புப் பெற்றவனாய், சுற்றம் தழுவும் முயற்சியுடையவனாய், பல்லோர்க்கும் வழிகாட்டியாய் வாழ முயல்பவனே மணாளன் வீடு என்பது கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டதல்ல, மனைவிதான் வீடு. அவன் இளைப்பாறும் இடம் இல்லாள் என்றால் இல்லத்தை நடத்துபவள், ஆள்பவள் என்பது பொருள். மனைவி என்பது யார்?

கணவன் உடலின் பாதி அவள். ஆண் உடலின், விலா எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டவள் பெண் என்று பைபிள் கூறுகிறது. சக்தி. சிவம் என்று இந்து மதம் சொல்லுகிறது கடவுள் பெண் சரிசமமாக இருக்கவே ஆண் உடலிலுள்ள விலா எலும்பிலிருந்து அவளை உண்டாக்கினார் என்று அறிய முடிகிறது. இதன் உட்கருத்து என்ன? ஆண் தன் உடம்பை எப்படிப் பாதுகாக்கிறானோ அது போலவே பெண் உடம்பையும் - மனைவி உடம்பையும் பாதுகாக்க வேண்டும்

உடலுறுப்பிலிருந்து தோன்றிய மனைவியை கணவன் எவ்விதம் நடத்துகிறானோ அதற்கு ஒப்பத்தான் மண வாழ்க்கையும் அமையும் மனைவி அமைவது எல்லாம் இறைவன் கொடுத்தவரம். அவ்வரம் பெற்றவன் இறைவன் ஆணைக்கு மாறுபடாது வாழ்ந்து வெற்றி காணல் வேண்டும். கணவனையே நம்பி வந்திருக்கும் மனைவி உன்னதமானவள். அவன் வாழ்விலே வனப்பு சேர்க்க வந்திருக்கும் வனிதை அவள். இது மட்டும் இல்லாமல் தன்னைப் பேணி வளர்த்த பெற்றோரை உதறித்தள்ளிவிட்டு வந்த தியாகி. தன் பெற்றோர் கூடப்பிறந்தவர் பிறந்தவீடு எல்லாவற்றையும். துறந்து கைப்பிடித்தவனுடன் தைரியமாக வந்திருப்பவளை மதித்து நடக்க வேண்டும். ஆடவன் மணவாழ்க்கையில் பெரியவனாக இருக்க வேண்டும். குழந்தையாக இருத்தல் ஆகாது. அவளைச் சிறிதும் மனம் கோண வைக்காமல் பொன்போல் போற்றிப் பாதுகாப்பது அவன் கடமைதான்.

இனிமேல் அவன் கவலையில்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்க முடியாது மனைவியின் மலர் முகம் அவனை விரும்பி அழைக்கும், சிறைப்படுத்தும். என்றும் பக்கத்தில் இருந்து கண்ணுங்கருத்துமாயிருந்து அதற்கான பணிவிடைகளை மனங்கோணாமல் செய்யும் இயல்புடையவள் மனைவி. கணவனிடம் சிறுமையைக் காணாமல் பெருமையைக்கண்டு பூரிப்படைபவளும் அவளே! குண மேம்பாட்டில் ஒருவன் மனைவியிடம் எவ்வளவு ஒழுக்கத்தை எதிர்பார்க்கிறானோ அதே ஒழுக்கம் அவனிடத்திலும அமைந்திருத்தல் வேண்டும். அவன் ஒழுங்கில்லாமல் இருந்துவிட்டு மனைவிமட்டும் ஒழுங்குடன் இருக்க வேண்டும் என்று எண்ணுவது எந்த விதத்திலும் நாகரிகம் அன்று. அவள் மனம் புண்படாதவாறு நடந்து கொள்வது அவன் கடமை. மனைவியின் மாண்பு மணவாளன் கையில்தான் உள்ளது. அவளை உயர்வாகப் போற்றினால் அவளும் அவனை உயர்வாகப் போற்றுவாள். உயர்வு தருபவனும் அவனே. உயர்வு பெறுபவனும் அவனே. மனைவி இப்பொழுது வந்தவள்தான். வயதிலும் சிறியவள்தான். அதற்காக அவளை ஏதோ உனக்கு இன்பம் அளிக்கவும் வாழ்க்கையில் அவளுக்கும் பங்குண்டு. பெரும்பங்கு அவளுக்கே உண்டு கூடுமான வரை எந்தக் காரியத்தையும் மனைவியைக் கலந்து ஆலோசனை நடத்தியே செய்ய வேண்டும்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை




திருமறைப்பணி நிலையம்

## பெரிய இறைவாக்கினர்கள்-7
## எசெக்கியேல்—II

த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

எசெக்கியேலின் நூலைப் பகுப்பாய்வு செய்வோமென்றால் அங்கே மிக முக்கிய மூன்று பிரிவுகள் உள்ளதைக் காணலாம்.
(1) அதிகாரங்கள் 1—24

இப்பகுதியில் அவரின் காட்சிகள் தொடங்குகின்றன. நாடு கடத்தப்பட்ட யூதமக்கள் பபிலோனிய வாழ்க்கை முறையையும், அவர்களின் சமய வழிபாடுகளையும், சிலை வழிபாட்டையும், தங்கள் வாழ்க்கைக்குள் உள்ளெடுக்கும் ஆபத்து நிலையைக் கண்ணுற்ற இறைவாக்கினர், உண்மை இறைவனாகிய யாவேயின் மகிமையையும், ஜெருசலேமின் சிறப்பையும் காட்சிகளூடு எடுத்தியம்புகின்றார். இவர் காணும் முதல் காட்சியிலே (1: 1—28) தென்படும் அரிய கருத்துக்களாவன: (a) இறைவன் சீயோன் மலை, ஜெருசலேம் என்ற குறிக்கப்பட்ட புவியியற் பரப்புக்குள் கட்டுப்பட்டவரல்ல, அவர் சர்வ வியாபி. அவர் ஜெருசலேமில் மட்டுமல்ல, நாடுகடத்தப்பட்ட இஸ்ராயேலருடன் பபிலோனியாவிலும் பிரசன்னமாயிருக்கின்றார், (b) அவர் அனைவர்க்கும் இறைவன்; ஜெருசலேமில் எவ்வாறு வல்லமை உள்ளவராக இருந்தாரோ அவ்வாறே பபிலோனியாவிலும் இருக்கின்றார். அவர் அனைத்தையும் அறிபவர்—ஆற்றல் மிக்கவர். (c) உலகத்தின் அரசுகள் எல்லாம் யாவேயின் பணியாட்கள்.

இப்படியான பண்புகளைக் கொண்ட மாட்சிமைமிக்க இறைவனைப் பிரிந்து செல்லும் ஜெருசலேம் வாழ் யூதர்களுக்கு தண்டனை நிச்சயம் உண்டு என்று தொடர்ந்து வரும் அதிகாரங்களில் மொழிகின்றார். எசெக்கியேல் ஜெருசலேமின் முற்றுகை, அதன் அழிவு அதில் ஏற்படும் பஞ்சம், யூதர்களின் அழிவு அடிமைத்தனம் போன்றவை யூதமக்களின் சிலைவழிபாட்டிற்கும், பிரமாணிக்கமின்மைக்கும் இறைவனால் கொடுக்கப்பட்ட தண்டனையாகும் என்கிறார் அவர். இதை உருவகங்கள் மூலம் (ஒல்லா, ஒலிபா, என்ற சகோதரிகளின் கதை) விளக்குகின்றார். இப்பகுதியின் நிகழ்வுகள், பபிலோனிய முற்றுகைக்கு முன் ஜெருசலேமில் உள்ள யூதருக்குக் கொடுக்கப்பட்ட செய்தியாகச் சித்தரிக்கப்பட்டிருப்பினும், உண்மையில் இவை நாடு கடத்தப்பட்ட யூதமக்களுக்கு அளிக்கப்பட்ட அறிவுரைகளே

மிகுதி அடுத்த இதழில்.

இரா. ஞானசைநாதன்

அறிந்து கொள்ளுங்கள் 47

## செங்கடலா? நாணற்கடலா?

மோயீசன் கடலின் மேல் கையை நீட்டவே ஆண்டவர் இரவு முழுவதும் மிகக் கொடிய வெப்பக்காற்று வீசச் செய்து கடலை வாரிக் கட்டாந்தரையாக மாற்றினார். நீர் இருபிரிவாகி விட்டது (யாத் 14: 21). இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக்கால் நனையாமல் நடந்து கடந்தார்கள் என்று யாத்திரையாகமம் கூறுகிறது.

யாத்திரையாகமச் சூழ்நிலையில் செங்கடலை மக்கள் கடந்தார்கள் என்று கூறுவது பொருந்தாது. இது எழுபது நூல் ஆசிரியர்கள் செய்த தவறாகும். விவிலியத்தில் வரும் எபிரேயச் சொல் நாணற்கடல் என்று பொருள்படும். இரமேசசுக்கு அருகே இரு நீர் நிலைகள் இருந்ததாக பழங்குறிப்புகள் கூறுகின்றன. ஒன்று ஹோரஸ் நீர் நிலை; மற்றது நாணற்கடல்.

சூயெஸ் கால்வாயுடன் பல ஆண்டுகளாகத் தொடர்பு கொண்ட திரு பார்டன் என்னும் கடல் தொடர்பு அலுவலர் கூறுகிறார். வரலாற்றுத் தொடக்கத்தில் யாத்திரையாகம காலத்தில் கசப்புக்காயலின் நீர்த்தேக்கம் ஒன்று ஐயமின்றி சூயெஸ் கால்வாயுடன் ஒட்டிக்கிடந்திருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது.

விவிலிய நிகழ்ச்சியில் இஸ்ராயேலர் கசப்பு ஏரிப்பகுதிகளை அடைந்தபின் எகிப்தியர் தங்களைத் துரத்தி வருவதை அறிகின்றனர். திகிலடைந்து கடவுளை நோக்கி மன்றாடுகின்றவர் மோயீசன் மூலம் கடவுள் அவர்களைக் காப்பாற்றிய நிகழ்ச்சி வீரகாவியப்பாணியில் எழுதப்பட்டுள்ளது.

"யாம்சுப்" என்ற எபிரேயச் சொல்லைச் செங்கடல் என்று பிற்கால மொழி பெயர்ப்பாளர்கள் மாற்றியதாக பல விவிலிய நூல் அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த நாணல்கடல் எங்கு இருந்தது என்பது பற்றி அறுதியிட்டுக்கூறமுடியாது. இது கசப்பு ஏரிகளுக்கு வடக்கில் இருந்தது எனவே கசப்பு ஏரிகளுக்கு வடக்கே கடத்தல் நிகழ்ச்சி நடந்திருக்கும் என்பர் சிலர். மற்றும்சிலர் கசப்பு ஏரிகளுக்கு தெற்கில் நாணற்கடலைக் கடந்திருக்க வேண்டும் என்பர்.

எனவே இஸ்ராயேல் செங்கடலைக் கடந்திருக்க முடியாது நாணற்கடலைத்தான் கடந்திருக்க வேண்டும்.

இ. ம. ஜெயசீலன்

## கேள்வியும் பதிலும்

1. பைபிள் என்ற வார்த்தை எப்படி வருகிறது?

பிப்ளோஸ் (கெபால்) என்பது பெனியநாட்டிலுள்ள (லெபனோன்) ஒரு துறைமுகப் பட்டினம். மொசபத்தோமியர் எகிப்தியர் சந்திக்கும் இடம் அந்த நகரம். எகிப்திலிருந்து இந்த நகரத்திற்கு பாப்பிரஸ் இறக்குமதி செய்யப்பட்டு, அங்கிருந்து பல இடங்களுக்கு விற்கப்பட்டன. பாப்பிரஸ் என்பது 4 அடி முதல் 15 அடி வரை வளரும் ஒரு வகை கோரைப்புல். இதிலிருந்து படகு, கயிறு, சாட்டை போன்ற பொருட்களைச் செய்யலாம். நடுப்பாகம் எழுதக்கூடிய தாள் செய்யப்பயன்பட்டது. பாப்பிரஸ் விற்பதில் மையமான "பிப்ளோஸ்" நகரத்திலிருந்து Ta Biblia என்ற கிரேக்கச் சொல்லும் Biblia என்ற லத்தீன் சொல்லும், Bible என்ற ஆங்கிலச் சொல்லும். வருகிறது 'பைபிள்' என்று ஒருமைபோல் தோன்றினும், அது பன்மைப் பெயராகும். "நூற்கள்" என்று அது பொருள்படும். (கிரேக்கத்தில் பலவின்பால், லத்தீனில் பெண்பால் ஒருமை)

2. பைபிள் தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

விவிலியம், பரிசுத்த வேதாகமம், திருநூல், புனித நூல்

3. நூலகம் என்று அதனை அழைப்பது ஏன்?

திருநூல் என்று சொல்லும் போது ஒரு நூல்போல் தோன்றினும் அது ஒரு நூல் அல்ல. பல நூல்கள் அடங்கியது. 73 நூற்கள் என்று கூறுவர். எனவே அதனை ஒரு நூலகம் என்று திருச்சபையின் தந்தையர் அழைக்கின்றனர்.

4. திருநூல் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது?

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு (உடன்படிக்கை) ஆகிய இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (யெரே - 31/31-34; 2கொரி 3: 5-18)

5. பழைய ஏற்பாட்டில் எத்தனை நூல்கள்?

அ எபிரேய பைபிள் (பாலஸ்தீன் பைபிள்) - 39

ஆ. கிரேக்கபைபிள் (அலெக்ஸாந்திரியா பைபிள்) - 46

இ திருச்சபையின் பைபிள் 46

6. பழைய ஏற்பாட்டில் 46 நூற்களை 45 என்று கணக்கிடுவது ஏன்?

சிலர் ஏரேமியாஸ் ஆகமத்தைத் தனிப் புத்தகமாகவும், புலம்பலைத் தனிப்புத்தகமாகவும் பிரித்து விடுகின்றனர். அப்போது 46.

வேறு சிலர் இரண்டையும் சேர்த்து ஏரேமியாஸ் என்று பெயரிட்டு ஒரே புத்தகமாக வெளியிடுகிறார்கள். அப்போது 45 ஆகும். 46 எனக் கணக்கிடுவது சிறந்தது.

7. பழைய ஏற்பாட்டை எவ்வாறு பிரிக்கலாம்?

எபிரேய யூதர்கள் - சட்டம், இறைவாக்கு, இலக்கியம் என மூன்று பிரிவுகளாகப் பழைய ஏற்பாட்டைப் பிரித்திருந்தனர். இப்பிரிவு இயேசுவின் காலத்திற்கும் முற்பட்டது என்பதற்கு வேதாகமத்தில் சான்று உள்ளது. காண்க மத் 22: 40: லூக் 24 : 44

எஸ். ஏ. நாதர் -




| | |
|---|---|
| ஒளி: 2<br>சுடர்: 21 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

## எம் விழிகளின் ஒளி யேசு

எமது கட்டுப்பாடான, கட்டுக்கோப்பான வாழ்க்கையின் அடி அத்திவாரத்திற்கு மூலக்கல்லாக யேசுவின் உறுதி வழிகளை நாம் தேர்ந்தெடுக்கின்றோம். எம் கண்ணின் வழி நாம் அடையும் உறுதியைப் போல யேசுவின் வாழ்க்கை முறைகள் நமக்குப் பலத்தை அளிக்கின்றன. இதனால் தான் பாரதியார்,

"ஒளி படைத்த கண்ணினாய் வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா"

என்று பாடினார்.

கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த போது தமது பெற்றோருக்கு அமைந்து நடந்த விதம், அவர் சிறுவர்கள் மேல் கொண்டிருந்த அன்பு, கடவுள் மேல் வைத்த விசுவாசம், பெரியோர் மேல் வைத்த மரியாதை என்பன அவரின் வாழ்க்கையை அழகுற எடுத்துக் காட்டும் குறிப்புகள் ஆகும். அவர் ஓர் பிரகாசமான ஒளி. அவர் எமது அகக் கண்ணிற்கும், புறக் கண்ணிற்கும் வெளிச்சமாகத் திகழ்கிறார். யேசு பிரகாசமான சுடர் பொருந்திய விளக்கு. நாம் அவ்விளக்கைப் பயன்படுத்தி இருட்டில் வாழாது ஒளி பொருந்திய ஒரு சுகவாழ்வு வாழ வேண்டும். கிறிஸ்து எம்மில் நிலையாய் இருந்தால், நாம் மலையாய் உயர்வடைவோம். அந்த உத்தமர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையை நாம் பின்பற்றும்போது நாம் புத்துணர்ச்சி பெற்ற மக்களாக இருப்போம். சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள்" என்று கூறிய எம் யேசு பெருமான் இளைய தலைமுறைகளாகிய எம்மையும் சேர்த்துக் கொள்வார் என்பது திண்ணம். ஒளிபொருந்திய அந்த சுடர் விளக்கு பாவிகளைத் தட்டியெழுப்பி அவர்களின் வாழ்க்கையைப் பிரகாசமாக்குகின்றது. இதனால் தான் எம் யேசுபெருமான், "நானே உலகின் ஒளி" என்றார்.

கடவுளின் அடையாளங்களில் ஒளியும் ஒன்று. ஆதிகாலத்தில் மோயீசனுக்கு முட்செடிகளின் நடுவே நெருப்பாகக் கடவுள் காட்சியளித்தார். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து சவுலுக்கு ஒளியாகத் தோன்றினார். அவ் ஒளி சவுலை மன்னித்து வாழ்வாங்கு வாழ வைத்தது. கண்ணானது எமது உடலுக்கு எவ்வளவு அவசியமோ, அதே போல் கிறிஸ்துவின் வழிகள் நம் ஆன்ம வாழ்விற்கு இன்றியமையாதது. கண்ணில்லாதவர் குருடர். கிறிஸ்துவின் வார்த்தைகளின் பொருளை நன்குணர்ந்து அவற்றை எம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ எமக்கு யேசுவின் ஒளி அத்தியாவசியமானது, நாம் உண்மையான ஓர் கத்தோலிக்கனாக உறுதியுள்ள ஓர் கிறிஸ்தவனாக வாழ நாம் கடவுளின் ஒளியை நாடுகின்றோம். கிறிஸ்துவை ஏற்காததன் மூலம் நாமே எம் அகக் கண்களை மூடிக் கொள்கின்றோம். யேசு உன்னதர், பரிசுத்தர். அவர் ஒரு ஜோதி. ஆகவே எம் ஆன்ம வாழ்விற்கு கிறிஸ்து எனும் ஒளி அவசியம். அப்போது தான் எம் அகவாழ்வு நன்மை பயக்கும் புறவாழ்வாக மாறும்.

இன்றைய சமுதாயத்திலே நாட்டின் சூழ்நிலைகளும், தீயசக்திகளும் விரும்பத் தகாத செயல்களும் எம்மை எம் பெருமான் கிறிஸ்துவின் வழியிலிருந்து விலக்க முயல்கின்றன. இதனால்நாம் யேசுவில் கொண்டுள்ள விசுவாசம் படிப்படியாகக் குறைகின்றது. ஆனால் கிறிஸ்தவர்கள் ஆகிய நாம் எம் விசுவாசப் பிடியிலிருந்து சிறிதும் தளர்ந்து விடக்கூடாது. கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்ட நாம் யேசு என்னும் ஒளியைக் கொண்டு விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும், கிறிஸ்து என்ற அருள் எம்மில் இருந்தால், நாம் எல்லோர்க்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவோம் என்பதை உள்ளூர உணர்ந்து இன்று முதல் எமது விழிகளின் ஒளியாக அவரை ஏற்றுச் செயற்படுவோம்.

பெயர்: அனித்தா ஷாலின் பிரான்சிஸ்
அங்கத்தவர் எண்: 44.

### படிப்புதிர் விடைகள்:

புதிர் (1) 1) க, 2) கல், 3) கடல் 4) கடவுள், 5) கலங்கரை 6) கண்மணிகள்

புதிர் (2) 1) கா, 2) காடி, 3) காசினி, 4) காவலன் 5) காவற்கலி, 6) காவற்கூடம்

புதிர் (3) 1) ஈ) 2) ஈகை, 3) ஈசன், 4) ஈப்பிணி, 5) ஈடேற்றம், 6) ஈரடிவெண்பா

பாராட்டுப் பெறுபவர்:- அ. தி. அ. லெம்பேட் அங். எண்: 89.

# புலர்ந்த....


(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாய் போறன்'' ''அது சரி! மச்சான் இன்றைக்கு மினி சினிமாவில நல்ல ஒரு 'அற்ராக்' படம் ஓடுது, நல்ல சண்டையும் ஒரே சூட்டிங் தானும்! நல்ல படமாம் வாரும் இரண்டுபேரும் போய்ப் பார்த்திட்டு பின்பு நீ வீட்டிற்குப் போகலாம்'' என்ருன் சுரேஷ். ''இல்லே சுரேஷ், நான் வரும்வரைக்கும் எல்லோரும் செபமாலே சொல்ல என்னே எதிர்பார்ப்பினம் நான் கட்டாயம் போகவேணும்.'' ''என்னடா ரவி,எனக்கென்ருல் இந்தச் செபமாலே ஒன்றிலும் நம்பிக்கையில்லே, கடவுள் ஒருவர் இருந்தா இப்படி அநியாயமெல்லாம் நடக்குமே. அது கிடக்கட்டும் - நான் தனியப் படத்திற்குப் போக விரும்பவில்லே. இரண்டு பேரும் வீட்டிற்கே போய் விடுவோம்'' என்று சுரேஷ் சொல்ல இருவரும் வீடு திரும்பிவிட்டார்கள். அன்றிரவு ரவியின் வீட்டிலே எல்லோரும் குடும்பமாகச் செபமாலே சொல்லிக்கொண்டிருக்கும் போது ரவியின் மனமோ அந்த 'அற்ராக்' படத்தை சுரேசுடன் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கலாமே என்று சொல்லிக்கொண்டிருந்தது வழமைபோன்று பொழுது புலர்ந்தது. காலேப்பத்திரிகையைப் புரட்டியபோது முதற்பக்கத்தில் போடப்பட்டிருந்த செய்தியைப் படித்ததும் அவன் அதிர்ச்சியடைந்து அசந்தே போய்விட்டான்'' மினி சினிமாவிற் கருகே குண்டுவெடிப்பு! 10 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.'' ''நான் மினிசினிமாவிற்கு, வீட்டிற்கு நேரத்தோடு வராமல் போயிருந்தால் அந்த 10 பேரில் நானும் சுரேசும் இருந்திருப்போம். மாதா தான் எங்கள் இருவரையும் காப்பாற்றினு. வீட்டைவிட்டுப் புறப்படும்போது நான் மாதாவை நோக்கிச் சொன்ன செபம் வீண்போகவில்லே'' என்று மனதிற்குள் மாதாவிற்கு நன்றி கூறியவாறு நடந்ததை குடும்பத்தவர்களிடம் விபரித்த போது எல்லோரும் மாதாவிற்கு நன்றிகூற ஆலயம் விரைந்தார்கள்.

(யாவும் கற்பனேயல்ல)

## வேதாகமக் குறுக்கெழுத்துப்போட்டி-5

யோனுஸ் ஆகமம்



மேலிருந்து கீழ்

1. நாம்... அந்தக்கடவுள் நம்மை நினேத்தருள்வார்.
2. நடுக்கடலின் ஆழத்தில் நீர் என்னேத்...
3. இந்த நினிவே மாநகரத்தின் மேல் நாம் இரக்கம்... மறுப்போமோ. இங்கு இது தலேகீழாய் வருகிறது.
7. மன்னனும் கோணியுடுத்தி இதன்மேல் அமர்ந்தார். இங்கு இது தலேகீழாய் வருகிறது.
5. இது ஆண்டவரிடமிருந்தே வருகிறது. இங்கு தலேகீழாய் வருகிறது.
6. கடல் அலேகள்... அவை அமைதியடைய என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டனர்.
8. கிழக்கிலிருந்து இது உள்ள காற்று வரும்படி கடவுள் கட்டளேயிட்டார்.
10. மறுநாள் வைகறையில் ஆண்டவர் ஒரு...வை அனுப்பினுர்.
14. யோனுஸ் இந்த இடத்திற்கே தப்பி ஓடிப்போக எண்ணிப் புறப்பட்டார்.
17. ''...வாழ்வதினும் சாவது நன்று''

இடமிருந்து வலம்

1. யோனுஸ் கப்பலின் இதன் மேல் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருந்தார்.
5. யோனுசை முன்னிட்டே கடுமையான இது அவர்கள் மேல் வந்தது.
9. வலதுகை, ...கை வேறுபாடுகூடத் தெரியாத மக்கள் மேல் இறைவன் இரங்காதிருப்பாரோ? முன்பின்னுகியுள்ளது.
10. நாமும் அழியாமல்...... வோம். முன்பின்னுகியுள்ளது.
11. எவனே முன்னிட்டு இந்தத் தீங்கு வந்தது என்பதை அறிய திருவுளச் சீட்டுப்... ...ன...
12. நகரத்திற்கு நிகழப்போவதைக் காணும்வரையில் பந்தலின்நிழலில் யோனுஸ் ............இருந்தார்.
13. இன்னும் நாற்பது நாட்களில் இது வீழ்த்தப்படும்.
15. அவர் ஆண்டவர் திருமுன்னிருந்து......என்பதை அவரிடமிருந்தே கேட்டறிந்தனர்.
16. ஆயினும் ஆண்டவரே பாதாளப்...யிலிருந்து நீர் என்னுயிரை மீட்டு வந்தீர்.
18. புழு அரித்ததால் உலர்ந்த செடி இது.
19. நினிவே நகரம் வீழ்த்தப்படக் கொடுக்கப்பட்ட கால எல்லே.

குறுக்கெழுத்துப் போட்டி 4-இன் சரியான விடைகளும் சரியான விடைஎழுதியவர்களின் பெயர்களும் அடுத்த இதழில் வெளிவரும். இறுதி நாள் 4-9-88. பரிசு ரூ. 25/-

## இவ்வாரப் புனிதர்கள்

ஆகஸ்ட்—13 புனித பாப்பு போன்சியானுசும், புனித குரு இப்போலித்துசும்
ஆகஸ்ட்—14 புனித கன்னிமரியின் விண்ணேற்புத் திருநாளின் திருவிழிப்பு
ஆகஸ்ட்—15 புனித கன்னிமரியின் விண்ணேற்பு
ஆகஸ்ட்—16 புனித ஹங்கேரி முடியப்பர்
ஆகஸ்ட்—19 புனித எவுதஸ் அருளப்பர்
ஆகஸ்ட்—20 புனித பெர்னுது-மடாதிபர்;-மறைவல்லுனர்.

### விண்ணக வாழ்வின் 2ஆம் ஆண்டு



சூசைப்பிள்ளே சுவாம்பிள்ளே
(Rtd. Station Master)

மலர்வு 04-12-1902 மறைவு 15-08-1986

உயிருள்ளவரை எம்மை
நேசித்தாய் நீ இறந்தபின்
உன்னே நாம் மறவோம்
இறைவா! உமது அடியானுகிய சுவாம்பிள்ளேயின் பாவங்களேப் பொறுத்தருளும். நித்திய இளேப்பாற்றியை இவருக்கு தந்தருளும்

பிரிவால் துயருறும்
மனேவி, பிள்ளேகள்,
பேரப்பிள்ளேகள்

புஸ்ப வாசா
பெரியவிளான்,
இளவாலே. A/100

தேனருவி:

### ஆண்டின் 20ஆம் ஞாயிறு (14—08—88)

## உயர்ந்தவற்றைக் கேளுங்கள்

மாமன்னன் அலக்சாண்டரின் அரசவையில் இருந்த ஏழைப் புலவர் ஒருவர் அவனிடம் பிச்சை கேட்டாராம். அரசன் தேவையான தொகையை நிதி அமைச்சரிடம் இருந்து பெற்றுக் கொள்ள உத்தரவிட்டார். ஆயினும் புலவர் நிதியமைச்சரிடம் சென்று கேட்டபோது, அவரோ ''இது சர்ச்சைக்குரிய விடயம், மீண்டும் அரசனிடம் அனுமதி கேட்க வேண்டும்'' என்ருர். ஏனென்ருல் புலவர் விரும்பியது பெருந்தொகையான பணம் அவர் அரசனிடம் சென்றபோது அவனும் புலவர் கேட்டதை மறுக்கவில்லே. காரணம் பெருந்தொகையான செல்வத்தை எதிர்பார்ப்பதனூடாக புலவர் தன் தாராள சிந்தைக்கு மதிப்பளிப்பதாக எண்ணினுன். தாராள மனம் கொண்டவர்கள் எதையும், எவர்க்கும் மறுப்பதில்லே. அதுவும் இல்லாதவர்களுக்கு அளிப்பதில் நிறைவு காண்கிருர்கள். பழமொழி ஆகமத்தில் இறைஞானம், விருந்து வழங்கும் பெரும் செல்வந்தனுக்கு ஒப்பிடப்படுகிறது. விவேகமற்றவர்களும், சிறுபிள்ளேத்தனமாக நடப்பவர்களும் 'இறைஞானம்' வழங்கும் அறிவு, விருந்தில் இலவசமாகக் கலந்துகொள்ள அழைப்பதில் நிறைந்த மகிழ்ச்சி அடைகிறது.

இறைவன் தாராள சிந்தை உள்ளவர். எனவே கேட்பவர்களுக்கு நிறைவாகக் கொடுப்பவர். ஆனுல் நாம்சிறுபிள்ளேத்தனமாக வயிறு நிறைய வேண்டும், பொருட்கள் வீட்டில் நிறையவேண்டும் என விரும்புவதும், வருந்திக்கேட்பதும் மூடத்தனத்தின் பிரதிபலிப்பே. அனேத்தையும் வழங்கும் இறைவன் நிலேயானதைத்தர விரும்புகிருர். என் தசையை உண்டு என் இரத்தத்தை குடிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான் எனத்தம்மையே தரும்போது, அப்பம் தருவார் என எதிர்பார்ப்பது யூத மக்களின் சிறுபிள்ளேத்தனத்தைக் காட்டுகிறது. இன்னுல் பலர் கிறிஸ்துவை ஏற்காத நாஸ்திகர்களாக அல்லது அறிவிலிகளாக சென்றுவிடுகிருர்கள், ஆனுல் புனித சின்னப்பர் கூறுவது போன்று ''விவேகம் உள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்'' என்பது இறைமகன் யேசுவின் தாராள சிந்தையில் வரும் அவர் பிரசன்னத்தை நாடுங்கள் என்பதே.

நற்கருணேப் பந்திக்கு முதலிடம் வழங்காது - ஆலயங்களில் வழமை, பாரம்பரியம் என பல அர்த்தமற்ற சடங்குகளுக்கு முதலிடம் வகிப்பது எமது சிறுபிள்ளேத் தனமே. அன்னதானத்திற்கும், அகதிச் சாமான்களுக்கும் முண்டியடிக்கும் பலர் யேசுவின் திருவுடலே, உட்கொள்ள அவ்வளவு ஆசை காட்டுவதில்லேயே.

புத்திசாலித்தனமாக செல்வத்தைதேடி, அதைப் பதுக்குபவர்கள், இறைவனேத்தேடி, விசுவாசத்தைக் காக்கத் தவறிவிட்டு, போலிகளின் பின்னே ஓடிவிடுகிருர்களே. உண்மையில் இறைவன் தாராள சிந்தை கொண்டவர், எனவே அவரிடம் அதி விலேயுயர்ந்த உன்னத அருள் வரங்களே கேட்போம். ஞானமுள்ளவர்களாக வாழ்வில் நிலேயான மன மகிழ்வைத் தரக்கூடிய செல்வங்களே அதிகம் தரவேண்டும் எனக் கேட்போம்.

சுவாமி— ஜீவா போல். அ.ம.தி

பழமொழி. 9: 1 - 6 வாருங்கள், உண்டு குடியுங்கள்.
எபே. 5: 15 - 20 ஞானிகளாய் நடந்துகொள்ளுங்கள்.
அருள. 6: 51 - 59 என் தசை மெய்யான உணவு என் இரத்தம் மெய்யான பானம்.

### 2ஆம் ஆண்டு நினேவு



செல்வன் எட்வின் விஞேதருஜ்
(விஞேதன்)

எங்களோடு: 18-02-1971 இறைவஞேடு: 06-08-1986

இறைவஞேடு நீ இணேந்து
இன்ருேடு இரண்டாண்டு!
இவ்வுலகில் நீ வாழ்ந்த
இனிமையான நாட்கள்...ஓ!
நினேத்துப் பார்க்கிருேம்
நெஞ்சினிலே மறக்கவில்லே

பெற்ருேர், சகோதரர்,
உறவினர்.

சூரியகட்டைக்காடு
நாவுட்டான். A/98

### வாய்ச்செபம்

அந்தோனியம்மாள்: சாமி உங்க பாட்டுகிளாஸ் பையன்கள் பூசையில் விளேயாடி சிரித்துக் கொண்டிருந்தார்கள். தகுதியில்லாமல் நன்மை வாங்கிவிட்டார்கள்...

பங்குக்குரு: நீங்களும் தகுதியில்லாமல் தானே நன்மை வாங்கினீர்கள்!

அந்தோ: (வியப்புடன்) எப்படி!

பங்கு: நற்கருணே உட்கொள்ளுமுன் ''ஆண்டவரே தேவரீர் என் உள்ளத்தில் எழுந்தருளிவர நான் தகுதியற்றவள்''...என்று நீங்கள் கூறியதை நான் நன்கு பார்த்தேன்... கேட்டேன்...

அந்தோ: அதுவா... அது வெறும் வாய்ச் செபம்.

பங்கு: பூசையின் எல்லாச் செபங்களும் உங்களுக்கு வெறும் வாய்ச்செபம் தானே...

அந்தோ: ? ? ? ? ? ?

நன்றி: தோழன் ஜன. 87

பாதுகாவலன்
PATHUKAVALAN

# பேராயர் வரதட்சணை, குடிவெறியை எதிர்க்க வேண்டுகிறார்

கேரளத்திலுள்ள வேரப்பொலி பேராயரான பேரருள் திரு கொர்ணீலியுஸ் வரதட்சணை, மதுவெறி போன்ற தீமைகளை எதிர்க்க சமுதாயத்தினைத் தட்டியெழுப்ப வேண்டும் என்று கத்தோலிக்க மன்றத்தின் இருபதாவது ஆண்டு நிறைவின்போது குறிப்பிட்டார்.

கேரள டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியரான பிதா ஜோர்ஜ் வெளிபரம்பில் விசுவாசத்திலும் ஆன்ம ஒளியிலும் ஊன்றிய சமூக செயற்பாடே பயனளிக்க முடியும் என்றார்.

கோட்டம் தினுத்து என்னும் பங்கில் ஒரு சவக்காலை பற்றி எழுந்த தகராறைத் தொடர்ந்து ஆலயத்தில்மரணச்சடங்குகளை நடத்தவேண்டாம் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டமை அடிப்படை சமய உரிமைகளுக்கு விரோதமானது எனக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

# திருச்சபை பற்றி ஜப்பானியரின் அபிப்பிராயம்

பிறமதங்களைச் சார்ந்த ஜப்பானியர் பொதுவாக திருச்சபைக்கு சாதகமான அபிப்பிராயத்தையே கொண்டுள்ளனர் என அண்மையில் யமகாட்டா என்னுமிடத்தில் 150 குடும்பங்களில் நடத்தப்பட்ட ஒரு ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. சென்ற ஆண்டு நவம்பரில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் 1977ம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் முடிவுகளை ஒத்துள்ளன.

திருச்சபை பற்றி இந்த நல்ல அபிப்பிராயம் இருப்பினும் கிறிஸ்தவம் இந்த விதமான நல்லபிப்பிராயத்தைப் பெறவில்லை. கிறிஸ்தவத்தை விரும்புபவரும் வெறுப்பவரும் சிறுபான்மையினரேயவார் (ஒவ்வொன்றுக்கும் 19) பெரும்பான்மையினரான 111 பேர் விருப்பு வெறுப்பு தெரிவிக்கவில்லை.

# நம்பிக்கை நிதியத்தின் கோரிக்கை நிராகரிப்பு

சமயச் சார்பான அறநிதியங்களே நிலச்சீர்திருத்தச் சட்டத்திலிருந்து முழு விலக்குப் பெறத் தகுதியுடையவை என சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார். தமிழ்நாடு தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரத்தில் ஸ்ரீ ராமலிங்க சுவாமி

திலிருந்து விலக்களிக்க மறுத்துவிட்டார்.

பரம்பரை தருமகர்த்தா சின்னமுத்து கிருஷ்ண ரெட்டியாரும் அறநிதியமும் இந்த முறைப்பாட்டைத் தாக்கல் செய்திருந்தனர். ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் சிலை வழிபாட்டை எதிர்த்தாலும், அவரும் அவ

# கத்தோலிக்க கல்லூரிக்கெதிராக முஸ்லீம்கள் ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானில் ஜமாத் ஆலே சும்மாத் என்னும் முஸ்லீம் இயக்கமொன்று லாசால் உயர்நிலைப்பள்ளி என்னும் கத்தோலிக்க கல்லூரிக்கெதிராக மே 14 ல் ஊர்வலமொன்றை நடத்தியது.

ஏப்பிரல் 30 ஆம் திகதி அக்கல்லூரியில் நடைபெற்ற விவாதமொன்றில் முகமது நபியை அவமதிக்கக்கூடிய சில கூற்றுக்களை ஒரு கிறிஸ்தவ மாணவன் பேசியதாகக் கூறப்படுகிறது. இதனை எதிர்த்தே ஊர்வலம் நடத்தப்பட்டது.

இச்சம்பவம் நிகழ்ந்தபோது கல்லூரி அதிபர் அருள்திரு லாரன்ஸ் வெளிநாட்டில் இருந்தார். உப அதிபர் அம்மாணவனைக் கல்லூரியிலிருந்து தடுத்துவைத்தார்.

அதிபர் நாடு திரும்பிய போது அவரைப் பதவிநீக்கம் செய்யவேண்டுமென முஸ்லிம் குழுக்கள் குரலெழுப்பின.

ஈற்றில் மே 21 ஆம் திகதி அதிபர் மாணவருக்கு உரையாற்றுகையில் சம்பவத்தை விளக்கி தாம் அதையிட்டு வருந்துவதாகவும், சகோதர மனப்பான்மையோடு முஸ்லீம் கிறிஸ்தவ மாணவருக்கிடையில் நல்லுறவை வளர்ப்பதே தமது நோக்கமென்று குறிப்பிட்டார். ஆனால் சில முஸ்லீம் தலைவர்கள் இன்னும் திருப்திப்படாமல் அம்மாணவனுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும் எனக் கோருகின்றனர்.

# ஆலயம் கட்டுவதற்கு எதிர்ப்பு

பாகிஸ்தானில் பகவல்பூர் என்னுமிடத்தில் கிறிஸ்தவ ஆலயம் அமைப்பதை இதாட் உட்முசல்மான் என்னும் முஸ்லீம் இயக்கம் எதிர்க்கின்றது. ஏற்கெனவே பகவல்பூரில் ஒரு ஆலயம் இருப்பதைக் காரணம் காட்டித் தற்போது ஒரு மசூதிக்கு அண்மையில் அமைக்கப்பட்டுவரும் ஓர் ஆலயத்தின் கட்டிட வேலையை நிறுத்துமாறு இதன் தலைவர்கள் ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டில் கோரியுள்ளனர்.

ஆனால் சிறுபான்மையினரான கிறிஸ்தவர்களின் உரிமைகள் அரசினால் பாதுகாக்கப்படவேண்டும் என்று பகவல்பூர் ஆலய அங்கத்தவர்களும், பாகிஸ்தான் திருச்சபை சங்கத்தினரும் வற்புறுத்தியுள்ளனர்.

# கலைக்காவிரி நடத்தும் இசைக் கல்லூரி

தமிழ் நாடு, திருச்சி மறைமாவட்டத்திலுள்ள கலை, சமூகத்தொடர்பு நிலையமான கலைக்காவிரி இவ்வாண்டு ஆனி மாதம் தொடக்கம் ஓர் இசைக் கல்லூரியை நடத்தி வருகிறது. இக்கல்லூரி மாணவரைப் பரீட்சைகளுக்குத் தயார் செய்யும். இப்பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டங்கள் பின்பற்றப்படும் என இக்கல்லூரி அதிபர் பிதா எஸ். எம். ஜோர்ஜ் கூறியுள்ளார்.

வீணை, வயலின், மிருதங்கம், தபலா, புல்லாங்குழல், ஆர்மோனியம் ஆகியவற்றிலும்வாய்ப்பாட்டிலும்மாணவர் பயிற்சிபெறுவர்.

கலைக்காவிரி ஏற்கனவே கடந்த $4\frac{1}{2}$ ஆண்டுகளாக நடனக்கலையைப் பயிற்றிவருகிறது. ஆனிமாதம் தொடக்கம் முழுநேர நடன வகுப்புகள் நடத்தவிருக்கிறது. கலைக்காவிரி இசை நடனக் குழுவொன்று இருமுறை ஐரோப்பிய நகரங்களில் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. வத்திக்கானில் திருத்தந்தை முன்னிலையிலும் இக்குழு கலை நிகழ்ச்சிகள் அளித்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வழியாக கலைக்காவிரி வானொலி நிகழ்ச்சிகளையும் தயாரிக்கின்றது. கவிஞர் கண்ணதாசனின் யேசுகாவியத்திற்கு இசையமைத்து வெளியிட்டது கலைக்காவிரியின் மிகச் சிறந்த சாதனையாகும்.

# மனந்திரும்பிய சீக்கியர் கத்தோலிக்க குருவானார்

மேனாடுகளில் சீக்கிய மதத்திலிருந்து மனந்திரும்பிய ஒரேயொரு கத்தோலிக்க குருவன ஜோண் டோமன் என்பவராவர்.

அமிரித்சார் நகரில் பிறந்த இவர் இங்கிலாந்திலுள்ள காடிவ் நகரத்தில் புனித இராயப்பர் பங்கில் பணியாற்றுகிறார். லண்டனில் வாழும் அவரது குடும்பத்தினர் இப்போதும் சீக்கியர்களே, ஆயினும் அவரது தீர்மானத்துக்கு அவர்கள் மதிப்பளிக்கின்றனர்.

# சின்னமடு செபமாலை மாதா திருநாள்

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள அன்னைமரியின் யாத்திரைத்தலமாகிய சின்னமடு

இத்திருப்பதிக்கு வருகைதந்து மரியாயின் ஆண்டைமுன்னிட்டு கூட்டுத்திருப்பலியை நிறை

என்பதை வலியுறுத்தினர். மரியாளின் ஆண்டைப் பிரகடனப்படுத்தித் திருத்தந்தை

பதி தீர்ப்பு வழங்கியுள்ளார். தமிழ்நாடு தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரத்தில் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் சீடரால் நிறுவப்பட்ட கொண்டு ரெட்டியார் அன்னதானக் கட்டளை என்னும் அறநிதியம் சமயச்சார்பானதல்ல என்று அதற்கு சட்டத் முறைப்பாட்டைத் தாக்கல் செய்திருந்தனர். ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் சிலை வழிபாட்டை எதிர்த்தாலும், அவரும் அவரது சீடர்களும் நெருப்பையும் ஒளியையும்வழிபட்டு நைவேத்தியமும் செய்தனர் எனவே இது சமயச் சார்பானது என்பதே அவர்கள் வாதம்.

## சின்னமடு செபமாலை மாதா திருநாள்

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள அன்னைமரியின் யாத்திரைத்தலமாகிய சின்னமடு செபமாலைமாதாவின் திருநாள் இவ்வாண்டு மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆவணித்திங்கள் ஐந்தாம் நாள் யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையவர்கள் இத்திருப்பதிக்கு வருகைதந்து மரியாயின்ஆண்டைமுன்னிட்டு கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றி திருநாளைச் சிறப்பித்து அன்னைமரியை மகிமைப் படுத்தினர். திருநாட்திருப்பலியின் போதுவாசிக்கப்பட்ட வாசகங்களை மையமாகவைத்து அன்னைமரியின் வாழ்க்கை வரலாற்றை விபரித்து தேவ அன்னையின் விசுவாச வாழ்க்கை இறைமக்களாகிய எமக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது என்பதை வலியுறுத்தினர். மரியாளின் ஆண்டைப் பிரகடனப்படுத்தித் திருத்தந்தை விடுத்த பொதுநிருபத்தை எடுத்துரைத்து புனித கன்னி மரியாளை நாமும் கண்டு பாவித்து அவளது வழியில் விசுவாசவாழ்க்கை வாழ்ந்து பரகதி அடைய அன்னைமரியிடம் வரம்கேட்க வேண்டுமென தமது மறை உரையில் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

—எஸ். எம். ஜே.

## கொரியாவில் கல்லறைகளுக்குத் தட்டுப்பாடு

செயோல் அதிமேற்றிராசனத்தில் பிரேதங்களைப் புதைப்பதற்குரிய நிலம் தட்டுப்பாடாக இருக்கின்றபடியால் திருச்சபை அதிகாரிகள் இது பற்றிப் பரிசீலனை செய்து வருகிறார்கள். இதற்காக 330, 000 சதுர மீற்றர் நிலத்தை வாங்கவும் ஆலோசித்துள்ளனர். ஆனால் எட்டு ஆண்டுகளில் இதுவும் நிரம்பிவிடலாம் என அவர்கள் கருதுகின்றனர். செயோல் நகருக்கு வெளியே தற்போதுள்ள சவக்காலையில் கடந்த ஆண்டில் 1000 கத்தோலிக்கர் அடக்கம் செய்யப்பட்டனர்.

கொரியாவில் 1987ல் இறந்த 253,000 பேரில் 48,000 பேர் தகனம் செய்யப்பட்டனர். கல்லறைத் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் கல்லறையின் அளவைக் குறைப்பதற்கும், மற்றொரு தகனசாலையை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கொரியாவில் 18 மில்லியன் கல்லறைகள் உள்ளன என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆழமற்ற, இரண்டடி உயரமான இக்கல்லறைகள் கொரியாவின் மலைகள் மீது ஏராளமாகக் காணப்படுகின்றன. இவைகள் எடுத்துள்ள நிலப்பரப்பு 912 சதுர கிலோமீற்றர், அதாவது கொரியாவின் இரண்டாவது பெரிய நகரமான பூசானைப்போல் இருமடங்கு.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மரியன்னையின் இல்லத்தரிசனம்

கிறிஸ்துவின் தாயான மரியாளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆண்டை முன்னிட்டு, மரி அன்னை ஆனையூரிலை இல்லம் தோறும் தரிசித்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனது ஆசீரை வழங்கி வந்தாள்.

இத்தரிசனத்தில் இருந்து ஒவ்வொரு குடும்பமும் 'குடும்ப செபமாலை' ஓதி, அனைத்து மக்களும் மரி அன்னையை அறியவும், அவளின் வழியில் வரவும், அவளைச் சந்தித்து அவளோடு கொள்ளும் அன்புறவிலே அருளைப்பெற்று மகிழவும், அதன் வழியாக உலகமானது கிறிஸ்துவின் பாதையில் அடி எடுத்துவைக்கவும் இது ஓர் சிறந்த சந்தர்ப்பமாகும்.

இந்த நிகழ்வானது பங்குத் தந்தையின் வழிகாட்டலில் மரியாயின் சேனை, புனித வின்சன் டி போல்சபை, மாதா கூட்டம் ஆகியவற்றின் அங்கத்தவர்களின் கடின ஒத்துழைப்பின் மத்தியில் மிகவும் சிறப்பாக நிறைவு பெற்றது.

— செ. எ. றெஷான்

## உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்